Registered No. M. 870.

பூர்ணசந்திரோதயம்.

சென்னை ராஜதானியின் தென்பாகத்திலுள்ள
பிரஹ்மஞானக் கிளைச்சங்கங்களின் மஹாசபையின்
ஆதரவின்மேல் மதுரையில் பிரதி ஆங்கிலமீ
15உயில் பிரசுரமாகி நடைபெறும்

மாதாந்தத் தமிழ்ப்பத்திரிகை.

தொகுதி 3. { 1912ஹூ நவம்பர்மீ 15உ / பரீதாபிஹூ கார்த்திகைமீ 1உ } பகுதி 7.

ப. நாராயண ஐயர், B. A., B. L., F. T. S.
அ. ரங்கஸ்வாமி ஐயர், B. A., B. L., F. T. S. } பத்திராதிபர்.

வருஷ சந்தா ரூ 2. தனிப்பிரதி அணா 4

மதுரை:
விவேகபாநு அச்சியந்திரசாலையில்
பதிப்பிக்கப்பெற்றது.

பொருளடக்கம்.

(CONTENTS.)

1. ஸந்மார்க்க முறையில் ஹிதோபதேசம்—ப. நா. ௧௯௭

Instruction to Occultists—By P. Narayana Iyer.

2. தேவாலயங்களில் நடத்தப்பெறும் கல்யாண உத்ஸவம்—வி. ராமசந்திர நாயுடு } ௨௦௨

Marriage Festivals in the Hindu Temples By V. Ramachandra Naidu.

3. திருவள்ளுவரும் சமரசசன்மார்க்கமும். மு. வேங்கடசாமி நாட்டார். } ௨௦௭

Tiruvalluvar and Theosophy—By M. Venkatasamy Nattar.

4. இராமாயண கதாபுருஷர்களின் குணாதிசயங்கள் பி. எஸ். ஸுப்ரஹ்மண்ய ஐயர். } ௨௧௪

Personnel of the Ramayana—By P. S. Subramanya Iyer.

5. சுமதியென்னும் உத்தமியின் சரித்திரம் எஸ். ஸ்வாமிநாதையர். } ௨௨௦

Sumathi, a novel—By S. Swaminatha Iyer.

6. சமாசாரம்: மாதுஸ்ரீ அந்நிபெஸண்டு அம்மையார் வருகை.—பத்திராதிபர். } ௨௨௬

News:—Mrs. Besant's arrival at Madras—Editor.

7. புத்தக வரவு—பத்திராதிபர். ௨௨௭

Review of books—Editor.

8. பதஞ்சலிமகரிஷி அருளிச்செய்த யோகசூத்திரம்.

Patanjala Yoga Sutra.

ADVERTISEMENT.

அறிவிப்பு.

உயர்ந்த புத்தகங்கள்! குறைந்தவிலை!

உபநிஷத் அர்த்ததீபிகை என்னும் பெயரால் பிரசித்தம் செய்யப்பெற்ற உபநிஷத்துக்களும், சூத்திரார்த்ததீபிகை என்னும் பெயரால் வெளிவந்த வேதாந்தசூத்ரபாஷ்யம் 9 பாகங்களும், அடியிற்கண்ட குறைந்த விலைக்குச் சொற்பகாலம் விற்கப்படும். வேண்டியவர்கள் தஞ்சாவூரில் கோவிந்தன் அண்ட் பிரதர்ஸ் கம்பெனியிலிருந்தும், சென்னை தம்புசெட்டித் தெரு ரிப்பன்பிரஸ்ஸிலிருந்தும், அடியில் கையொப்பமிட்டிருக்கிறவரிடமிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

புத்தகங்களின் விவரம்.

இவைகளில் ஸம்ஸ்க்ருத மூலமும் தமிழ்பாஷ்யங்களும் குறிப்புரைகளும் அடங்கியிருக்கின்றன.

	முன்விலை.	இப்போதியவிலை.
	ரு அ ப	ரு அ ப
ஈசோபநிஷத்	1—8—0	0—8—0
கேநோபநிஷத்	1—12—0	0—10—0
கடம்	4—0—0	1—8—0
முண்டகம்	2—8—0	1—0—0
மாண்டூக்யம் கவுடபாதர் அவர்களுடைய காரிகையுடன் தமிழில்	3—8—0	1—8—0
தைத்திரீயம்	6—0—0	2—0—0
சூத்ரார்த்ததீபிகை 9ஸஞ்சிகை	6—12—0	2—4—0

தபால்சார்ஜ் பிரத்யேகம்.

அ. சிவராவ்.

ரிடையர்டு டிஸ்ட்ரிக்ட் ரிஜிஸ்ட்ரார்,
61 நீர். கச்சேரி ரோட்,
மைலாப்பூர்

NOTICE.

A Theosophical Book Depot has been opened at the *Hall of Theosophy, Madura* for sale of English and Tamil Theosophical books which are sold very cheap.

V. VENCUSAMI AIYAR,
Manager.
Theosophical Book Depot, Madura.

புஸ்தகம், அண்டுப் பத்திரிகைகள் விளம்பரம்.

ஏசுகிறிஸ்து என்பார் ஒழுகிக்காட்டிய ஒழுக்கமுறைநூல். The Imitation of Christ (in Tamil)	1-0-0
பிராசீன தர்மங்களின் உயர்வும், இக்கால ஆசாரங்களும்	0-6-0
மனிதனின் வமிசாவளியின் உண்மை	0-4-0
ஹிந்துமத தூஷண பரிகாரம்	0-4-0
Avvayar's Yoga aphorisms in English	0-4-0
கடோபநிஷத் தமிழ்மொழிபெயர்ப்பு	0-3-0
தைத்திரீயோபநிஷத் தமிழ் மொழிபெயர்ப்பு	0-3-0
சுவேதாசுவதரோபநிஷத் ஷை	0-3-0
ஐதரேயோபநிஷத் ஷை	0-2-0
மௌனவாக்கு	0-2-0
சன்மார்க்கதீபம்	0-2-0
ஈசோபநிஷத் தமிழ் மொழிபெயர்ப்பு	0-1-0
அன்னிபெஸண்டு அம்மையார் சரித்திரம் (செய்யுள்)	0-1-0
டில்லிதர்பார் மஹோத்ஸவம்	0-1-0
வெள்ளியம்பலம் என்னும் ஞானிகளின் சங்கமும் அதனின்று வெளிவரும் ஆசாரிய புருஷர்களும்	0-1-0
வி. கிருஷ்ணஸ்வாமி ஐயர் அவர்களின் சரித்திரச்சுருக்கம்	0-0-6
ஏசுகிறீஸ்து என்பார் சரிதம்	0-0-6
தேவாலயம்	0-0-3
தர்மசத்திரங்களும் அவைகளின் சீர்திருத்த முறைகளும்	0-0-3
இந்தியபுத்திரர்களின் சங்கம்	0-0-3
பிரஹ்மவித்யை (ஆங்கிலத்தில்)	0-0-3
சிராத்தம்	0-0-3
சன்மார்க்க சபையை நடத்தும் முறை	0-0-3
பிரஹ்மஞான சபையின் யந்திரம்	0-0-2
பிரஹ்மவித்யை	0-0-2
அஷ்டமி பிரதக்ஷிணம்	0-0-1
பிரமஹ்ஞான சபை	0-0-1
தாசவதாரங்களின் உண்மை	0-0-3
மஹாத்மாக்களும், அவர்களை அடையும் மார்க்கமும்	0-0-3

மேற்கண்டவைகளுக்கு 100-க்கு 10 கமிஷன் கொடுக்கப்படும். தபாற் கூலி பிரத்தியேகம். வேண்டுவோர் மதுரை தியஸாபிகல் ஸொஸைட்டி பிரெசிடெண்டு ய. நாராயணையரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

பூர்ணசந்திரோதயம்.

தொகுதி 3. | 1912ஞ் நவம்பர்மீ 15உ பரீதாபிஞ் கார்த்திகைமீ 1உ | பகுதி 7.

ஸந்மார்க்க முறையில் ஷிதோபதேசம்.

(168-ம் பக்கத் தொடர்ச்சி.)

அடியிற்கண்ட சுவேதாச்வதர உபநிஷத்தின் மந்த்ரம் இங்கு கவனிக்கத்தக்கது.

𑌸𑌮𑍇 𑌶𑍁𑌚𑍌 𑌶𑌰𑍍𑌕𑌰𑌾𑌵𑌹𑍍𑌨𑌿𑌵𑌾𑌲𑍁𑌕𑌾
𑌵𑌿𑌵𑌰𑍍𑌜𑌿𑌤𑍇 𑌶𑌬𑍍𑌦𑌜𑌲𑌾𑌶𑍍𑌰𑌯𑌾𑌦𑌿𑌭𑌿𑌃॥
𑌮𑌨𑍋𑌽𑌨𑍁𑌕𑍂𑌲𑍇 𑌨 𑌤𑍁 𑌚𑌕𑍍𑌷𑍁𑌪𑍀𑌡𑌨𑍇
𑌗𑍁𑌹𑌾𑌨𑌿𑌵𑌾𑌤𑌾𑌶𑍍𑌰𑌯𑌣𑍇 𑌪𑍍𑌰𑌯𑍋𑌜𑌯𑍇𑌤𑍍॥

இ—ள். சுத்தமானதும், ஏகாந்தமானதும், காற்றுக்கு அணைவாக இருப்பதும், ஸமதலமாகவும், கல் இல்லாததும், எரிமணல் இல்லாததும், மநத்தை இனிய சப்தத்தால் ஸந்துஷ்டி செய்யக்கூடியதும், ரமணீயமான ஓடையுள்ளதும், மரநிழலுள்ளதும், கண்ணுக்கு அப்ரீதியை உண்டுபண்ணாததுமான இடத்தை ஸந்மார்க்கத்தை அப்யஸிக்கிறவன் தெரிந்தெடுத்துக்கொண்டு அதின்கண் ஆத்ம விஷயத்தை நாடவேண்டும்.

(2) ஒருவரும் இல்லாமல் தனித்திருந்து அந்தர்முகப்படுகிறதற்கு ஆரம்பிக்குமுன், அல்லது தனித்திருந்து குருவுடன் நேரில் ஸம்பாஷணை புரிய யத்நம் செய்யுமுன், தன்னைப்போன்று ஸந்மார்க்க முறையில் அப்யஸிக்கின்ற ஸஹபாடிகள் இருத்தல் நலம். ஆனால் தகுந்தவர்களைத் தெரிந்தெடுத்தல், சிஷ்யனால் இயலுவதன்று. குருவானவர் ஸஹபாடிகளின் மநோமய விக்ஞாநமயகோசங்களின் அமைப்பை ஆராய்ந்துணர்ந்து அவைகள் பொருத்தமாயிருக்கக்கூடிய சிஷ்யர்களைத் தெரிந்தெடுப்பர். சிஷ்யர்களுக்குள் சாந்தமும் நேர்மையும் நிகழாவிடில் உபதேசம் பலனற்றதாகும். ஈசுவர சங்கற்பத்துடன் முரணாமல் அதைக் கொண்டுசெலுத்தும் தகைமையைப் பெறுதலுக்கு ஸஹபாடிகளுடன் கூடிய இத்தகைய அப்யாஸம் இன்றியமையாதது. அப்படி ஸஹபாடிகளுடன் கூடி முதன்மையிற் கற்கவேண்டிய விஷயங்களையெல்லாம் ஐயமறக் கற்றிருக்க வேண்டும். கூடுகிற இந்த ஸஹபாடிகளின் எண்ணிக்கை ஒற்றைப் படையாக இருத்தல் வேண்டும். மந்த்ரத்தை ஜபித்தல் ஒற்றைப் படையாகவும் இரட்டைப்படையாகவும் ஆக இருவகையாக நிகழ்கின்றது. ஒற்றைப்படையாக நிகழ்தல் மூலகாரணமான சைதந்யம் ஒன்றே என்றும், அதனின்று எல்லாம் உண்டாகி அதிலேயே லயமடைகிறதென்றும் ஸூசிப்பிக்கவும் இரட்டைப்படையாக நிகழ்தல் பிரகிருதி புருஷன் என்ற மிதுநம் இருக்கின்றனவென்பதை ஸூசிப்பிக்கும்பொருட்டும் இவ்விதமிருப்பதாகச் சில அறிஞர்களின் அபிப்பிராயம்.

(3) குருவானவர் சிஷ்யனுக்கு உயர்நலமமைந்த ரஹஸ்யங்களை உபதேசிக்குமுன்னும் வித்திகள் நடாத்தும் முறையை உபதேசிக்குமுன்னும் சிஷ்யனுடைய மநம் மாசற்றதாயும் சாந்தமாயும் இருக்கிறதாவென்றும் ஸஹபாடிகளுடன் அன்பும் நேர்மையும் பற்றியதாக விருக்கிறதாவென்றும் நன்றாய் ஆராய்ந்து கவனிக்கவேண்டும். அப்படியின்றேல் ஞாந ஆதேசங்களும் ஸந்மார்க்கமுறை ஸம்பந்தமான உயர்தர தர்மங்களும் வித்தி முறைகளும் வெறும் வார்த்தைகளாகும்; வீணாகச் சிதறும், ஒரு பயனையும் பயக்காது. வெளியில் பரவும், தீமையையும் விளைவிக்கும்.

(4) சிஷ்யர்களான உபாஸகர்கள், கைவிரல்கள்போல அந்யோந்யமாய் இருக்கவேண்டும். ஒருவர்க்கு நேரிடும் துன்பத்தை மற்றவரும் உணரவேண்டும். ஒருவருக்குண்டாகும் ஸந்தோஷம் மற்றவர்கள் மநங்களிலும் களிப்பை உண்டுபண்ணவேண்டும். இவ்விதமின்றேல் ஞாந உபதேசத்தைச் செய்தலுக்குமுன், உரிய லக்ஷணங்களில்லையென ஏற்படும். உபதேசம் மேற்செல்லாமல் நிறுத்தப்பெறல் நலம். ஆனால் இவ்விதம் ஸம்பவிக்சமட்டாது. ஏனெனில் சிஷ்யர்களுடைய ஸ்வபாவங்களை முன்னரே அறிந்து குருவானவர் அவர்களை முன்னரே தெரிந்தெடுத்திருக்கிறார். நேர்மையில்லாத சிஷ்யர்கள் எத்தன்மையான யோக்யதைகள் உடையவராயினும், நேர்மைபற்றி ஒருவரோடொருவர் அன்புடன் ஒழுகும்வரை ஞாந ஆதேசங்கள் பெறுதலுக்கு அநேக வருஷங்கள்வரை காத்திருக்கவேண்டுவதாகும்.

(5) ஒரு காயகன் வீணையிலுள்ள தந்திக்கம்பிகளை ஸ்வரபேதத்தை உண்டாக்காமல் பொருத்தமாக நிகழும்படி அமைத்துக்கொள்ளுதல்போல சிஷ்யர்களான உபாஸகர்களை குருவானவர் அமைத்துக்கொள்ளல் வேண்டும். ஒவ்வொரு கம்பியும் தனித்தனி வித்யாஸமான ஸ்வரத்தை யுண்டுபண்ணினாலும் எல்லாம் ஒருங்கு சேர்ந்து இனிமையான காநத்தை உண்டுபண்ணுகின்றமைபோல சிஷ்யர்கள் வெவ்வேறான ஸ்வபாவமுள்ளவர்களாக விருப்பினும் ஒருங்கு சேர்ந்து நேர்மையாக ஒழுகுதல் வேண்டும். வீணையின் ஸ்வரஸ்தாநங்களாக சிஷ்யர்கள் இருக்கிறார்கள். வீணையின் தந்திக் கம்பிகளின்மேல் குருவின் விரல் அந்தந்த ஸ்வரஸ்தாநத்தில் பதிய ஓரோர் ஸ்வரஸ்தாநம் ஓரோர் ஸ்வரத்தை உண்டுபண்ணினாலும் எல்லாம் சேர்ந்து இனிமையான காநத்தை உண்டுபண்ணுகின்றன. அவ்விதமே சிஷ்யர்களுடைய மநங்கள் குருவின் ஞாந உபதேசம் பெறவே எல்லாம் நேர்மையாய் ஞாநத்தை காநம்பண்ணுமாறுபோல தேவர்களுக்குத் திருப்தியாயும் சிஷ்யனுக்குப் பிரயோஜநமாயும் அமையும். இவ்விதம் ஞாநமானது சிஷ்யர்களின் ஹிருதயங்களில் பதிப்பிக்கப்படவேண்டும். "மௌநவாக்கு" என்ற ஞாநநூலின் (74, 75-ம் பக்கங்களைப் பார்க்க) கண் உள்ள அடியிலகண்ட உபதேசம் இங்கு கவனிக்கத்தக்கது. சிஷ்யர்களை மநத்திற்குத் தகை

ந்து தொனிக்கும் வீணையின் தந்திகளுக்கு உவமிக்கலாம். ஜனஸமூஹத்தை, தொனியை அபிவிருத்தி செய்யும் அதன் சுரைக் குடுக்கைக்கு உவமிக்கலாம். அவ்வீணையைத்துலாவும் கையை, உலக நியந்தாவான ஈசனின் உலக ஸம்ரக்ஷணைக்கு ஆதாரமான இனிய நர்த்தனத்திற்கு ஒப்பிடலாம். குருநாதனின் ஸ்பர்சத்திற்கு இசைந்து நேர்மையாய் இனிய கானங்களை அத்தந்திகள் தொனிக்காவிடில் அவை அறுபடும்; எறியப்படும். சிராவகர்களான சிஷ்யர்களின் மனங்களும் இவ்விதமே நேர்மையாக நிகழவேண்டும். உபாத்தியாயரின் மனத்துடன் சிஷ்யர்களின் மனங்கள் நேர்மையாக இசைந்து ஒருமையாகவேண்டும். உபாத்தியாயர் மனமோ ஈசுவரனின் மனத்துடன் இசைந்து நேர்மையாக நிகழும். சிஷ்யர்களின் மனங்கள் அவ்விதம் நேர்மைப் படுத்தப்படாவிடின், குருசிஷ்ய சம்பந்தமும் அற்றுப் போம்.

(6) ஸித்திகளை அடையவேண்டுமென்ற விருப்பமுள்ளவன் உலகத்தையும் உலகத்தின் ஆசாபாசங்களையும் துறத்தல் வேண்டும். (ஸித்திகளாவன: அணிமா, மஹிமா முதலியவைகள்.)

(7) இம்மார்க்கத்தில் பயிலுகின்றவன் தன் ஸஹபாடிகளை விட, தான் உயர்ந்தவன் எனவும், நலமுடையவன் எனவும், குருவுக்கு அதிகப் பிரியகரமானவன் எனவும், தான் நிகரற்றவன் எனவும், தனக்கு மிகுநரையிலன் எனவும் நினைத்தல் கூடாது. அவனது எண்ணங்களெல்லாம் ஹிருதயத்தில் குடிகொண்டிருக்கவேண்டும். அதினின்று எவ்விதவிஷமமான எண்ணத்தையும் அகற்றவேண்டும். எல்லா ஜீவராசிகளுடனும் ஒருமையுணர்வு பெறல் வேண்டும். வேற்றுமை யுணர்வையகற்றல் வேண்டும். இவ்விதமின்றேல் ஞான முறையில் இவன் வெற்றி பெறான்.

(8) சிஷ்யனானவன் எவ்வித ஜீவராசிகளின் ஸ்பர்சத்தையும் தவிர்க்க வேண்டும். அவைகளினின்று வெளிவந்து கொண்டிருக்கும் எவ்வித சக்திகளும் தன்னைத் தாக்காமல் அவைகளினின்று விலகவேண்டும். எவ்விதப்பிராணிகளையும் சீராட்டிவளர்க்கக்கூடாது. அவைகளின் உறவையும் பழக்கத்தையும் ஒழிக்க வேண்டும். சில மரங்கள், சில செடிகளையும் கூடத் தொடக்கூடாதென்ற நியமமும் உண்டு. இவன் மனம் எல்லா ஜீவராசிகளுடனும் வேற்றுமைபாவம்

பெறுமல் ஒருமையுணர்வு பற்றியதாக விருப்பினும் ஸ்தூல உடல் ஸம்பந்தப்பட்டமட்டில் ப்ருதக்காக இவன் தனித்திருத்தல் வேண்டும். அது நலம் பயக்கும். தன் உணவு பாத்திரங்களையும் தன் உடைகளையும் பிறர் உபயோகிக்கக்கூடாது.

(9) சிஷ்யனின் மநம் உயர்ந்த தத்துவங்களைத்தவிர மற்றவைகளைக் கவனியாதிருத்தல் வேண்டும். இது தான் ஹ்ருதயமார்க்கத்தின் தர்மம். இதினின்று நழுவுகிறவன் அக்ஷிமார்க்கத்தில் விழுவான். அதாவது வெறுமையான விக்ஞாநப்பயிற்சி முறையில் பிரவேசிப்பான். தர்க்க ஆரவாரம் விரியும். அநுபவக்ஞாநம் பெறுன்.

(10) சிஷ்யன் மாம்ஸாதிகளை உணவாக ஏற்கக்கூடாது. கஞ்சா, கள்ளு, அபின், முதலிய இலகிரியை உண்டுபண்ணும் பதார்த்தங்களைத் தவிர்க்கவேண்டும். அவைகள், கீழான துர்தேவதைகள் அப்யஸிக்கிறவனை நாடும்படி செய்யும். அப்பதார்த்தங்களை உண்டுபண்ணுகிற கீழான ஜநங்களின் தீய ஸ்வபாவங்களும் இவனைத் தாக்கும்.

(11) தியாகம், இந்திரிய நிக்கிரஹம், மநோ நிக்கிரஹம், நீதிமுறை வழுவாத அநுஷ்டாநங்கள், நல்ல எண்ணங்கள், நன்மொழி, ஸத்காரியம், எவரிடமும் நேசமாயிருத்தல், தன்னை முற்றும் மறத்தல் இவை யெல்லாம் ஞாநம் பெறுதலில் உயர்ந்த சாதகங்களாகும். ஞாநமுறையில் மேல் படி ஏறுவதில் அநுகூல சாதகங்களாம்.

(12) மேற்கண்ட விதிகளைத் தவருமல் அநுஷ்டித்தால் சிஷ்யனனவன் காலக்ரமத்தில் ஸித்திகளை அடைவான். காலக்ரமத்தில் ஸர்வபாவாபத்தியின் பூர்ண நிலையைப் பெறுகிறுன். அதாவது ஸர்வமும் தானுய் தன்னில் ஸர்வத்தையும் பார்க்கிறுன். ஸர்வம் வாஸுதேவோஹம் என்ற மெய்யுணர்வு பெறுகிறுன். ஸர்வம் சிவமயம் என ஆநந்திக்கிறுன்.

(இன்னும் வரும்.)

ப. நாராயண ஐயர்.

284

ஓம்.

தேவாலயங்களில் நடத்தப்பெறும் கல்யாண உத்ஸவம்.

திவ்ய தேசங்கள் என்ற புண்யக்ஷேத்ரங்களில் பூர்வகாலத்தில் மஹரிஷிகள் முதலிய பெரியவர்களால் பிரதிஷ்டை செய்யப்பட்ட ஏராளமான தேவாலயங்கள் இருககின்றன. அவ்வாறே அதற்குப் பிற்காலங்களிலும் பக்தர்களால் பிரதிஷ்டை செய்யப்பட்ட தேவாலயங்களும் அநேக கிராமங்களில் இருக்கின்றன. இத்தேவாலயங்களின்கண், ஸாதாரணமாக ஈசுவரனைக் காட்டும் புருஷ விக்கிரஹங்களும் அவரது சக்திகளைக் காட்டும் ஸ்திரீ விக்கிரஹங்களும் இருக்கும். அவ்வித தேவாலயத்திலுள்ள ஸ்திரீ புருஷ உத்ஸவ விக்கிரஹங்களுக்கு பிரதி வருஷத்திலும் கல்யாணோத்ஸவத்தை நடப்பித்து ஜநங்கள் ஆநந்திப்பார்கள், ஆனால் இதன் ரஹஸ்யார்த்தத்தை அறிந்தவர்கள் சிலர்தான் இருக்கிறார்கள். அந்யமதஸ்தர்களும் அந்ய தேசஸ்தர்களும் நம்மைப் பார்த்து "கல்லாலும் லோஹங்களாலும் செய்யப்பட்ட விக்கிரஹங்கள் எவ்விதம் கடவுளாயின? அவை கடவுளாயின் அவை ஏன் பேசமாட்டா? கடவுளுக்கு நம்மைப்போலவே மனைவியும் குழந்தைகளும் இருக்குமா? மேலும், மனிதனைப்போல் அல்லாமல் சடவுளுக்கு இரண்டு பெண்சாதிகள் இருப்பதாகச் சில தலங்களில் விக்கிரஹங்களை ஸ்தாபித்திருக்கிறார்களே?" என்ற இவ்வித கேள்விகளால் ஆக்ஷேபித்து வருகின்றார்கள். இவ்வித ஆக்ஷேபங்களுக்கு ஸாதாரணமான ஜநங்களுக்கு சரியான பதில் சொல்லத் தோன்றுகிறதில்லை. இதனால் சிலருக்கு விக்கிரஹத்தினிடமுள்ள பக்திக்கு பங்கம் ஏற்படுகிறது. அந்தந்த விக்கிரஹத்தினுடைய கருத்தையும் அவைகளின் பிரயோஜநத்தையும் அவைகள் உணர்த்தும் ரஹஸ்யங்களையும் நாம் கிரஹிப்போமாகில் இவ்வித ஆக்ஷேபங்களுக்கு அவ்வளவாகப் பயப்படவேண்டிய அவசியமிராது.

2. பிரபஞ்ச உத்பத்திக்கு ஈசுவரனும், ஈசுவர ஸம்பந்தமான அபர ப்பிரகிருதி, பர ப்பிரகிருதி என்ற இரண்டு சக்திகளும் காரணமாக விருக்கின்றார்கள். அச்சக்திகளுடையவும் ஈசுவரனுடையவும் சேர்க்கையாலே ஸ்ருஷ்ட்யாதித் தொழில்கள் நடந்தேறி வரு

கின்றன. இவ்விஷயத்தை ஸ்ரீ கிருஷ்ண பகவான் அர்ச்சுநனுக்கு உபதேசித்திருக்கிறார்.*

பூமி, ஜலம், அக்நி, வாயு, ஆகாசம், மநம், புத்தி, அஹங்காரம் என்ற எட்டுவித பிரிவுகளை உடைய கீழான ஜடப்பிரகிருதி என்ற சக்தி ஒன்றும், இதைவிட பின்னமானதும் உத்கிருஷ்டமுள்ளதும் இப்பிரபஞ்சத்தை தரிப்பதும், ஜீவஸ்வரூபமானதுமான சக்தி ஒன்றும் இந்த இரண்டு சக்திகளின் ஸஹாயத்தாலே ஈசுவரன் ஸமஸ்தமான பிரபஞ்சங்களையும் ஸ்ருஷ்டித்து, ரக்ஷித்து, அழித்தும் வருகிறார் என்பதாகவும் பகவானை விட அந்யமானது ஒன்றுமில்லை என்பதாகவும் நூலில் கோர்க்கப்பட்ட மணிகளைப் போல ஸர்வப் பிரபஞ்சங்களுக்கும் ஈசுவரன் ஆதாரமாக இருக்கிறார் என்பதாகவும் போதிக்கிறார். இக்கருத்தே பகவத்கீதை 15-வது அத்யாயம் 16, 17 சுலோகங்களிலும் விவரிக்கப் பட்டிருக்கிறது.

“ 𑌦𑍍𑌵𑌾𑌵𑌿𑌮𑍌 𑌪𑍁𑌰𑍁𑌷𑍌 𑌲𑍋𑌕𑍇 𑌕𑍍𑌷𑌰𑌶𑍍𑌚𑌾𑌕𑍍𑌷𑌰 𑌏𑌵 𑌚 ।
𑌕𑍍𑌷𑌰𑌸𑍍𑌸𑌰𑍍𑌵𑌾𑌣𑌿 𑌭𑍂𑌤𑌾𑌨𑌿 𑌕𑍂𑌟𑌸𑍍𑌥𑍋𑌽𑌕𑍍𑌷𑌰 𑌉𑌚𑍍𑌯𑌤𑍇” ॥
𑌉𑌤𑍍𑌤𑌮𑌃 𑌪𑍁𑌰𑍁𑌷𑌸𑍍𑌤𑍍𑌵𑌨𑍍𑌯𑌃 𑌪𑌰𑌮𑌾𑌤𑍍𑌮𑍇𑌤𑍍𑌯𑍁𑌦𑌾𑌹𑍃𑌤𑌃 ।
𑌯𑍋 𑌲𑍋𑌕𑌤𑍍𑌰𑌯𑌮𑌾𑌵𑌿𑌶𑍍𑌯 𑌬𑌿𑌭𑌰𑍍𑌤𑍍𑌯𑌵𑍍𑌯𑌯 𑌈𑌶𑍍𑌵𑌰𑌃 ॥

அதாவது ஜகத்தினிடமாக நசிக்கும் தன்மையையுடைய புருஷனொருவனும் நசிக்காத புருஷன் ஒருவனும் இருக்கிறார்களென்பதாகவும் பிரஹ்மாதிஸ்தம்ப பரியந்தமுள்ள ஸமஸ்தமும் நசிக்கும் புருஷனுடைய சம்பந்தமுள்ளனவென்பதாகவும், ஜீவனென்ற பகவானுடைய மாயாசக்தியானது நசிக்காத புருஷனென்பதாகவும் இந்த இருவித புருஷர்களைவிட பரமாத்மா சிரேஷ்டமான உத்தம புருஷனென்பதாகவும் அவர் லோகத்ரயங்களிலும் நிறைந்திருந்து ரக்ஷிக்கிறார் என்பதாகவும் அர்த்தம்.

மேலும் பகவத்கீதை 14-வது அத்யாயம் 3, 4, சுலோகங்களில்:—

𑌮𑌮 𑌯𑍋𑌨𑌿𑌰𑍍𑌮𑌹𑌦𑍍𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌤𑌸𑍍𑌮𑌿𑌨𑍍𑌗𑌰𑍍𑌭𑌂 𑌦𑌧𑌾𑌮𑍍𑌯𑌹𑌮𑍍 ।
𑌸𑌂𑌭𑌵𑌸𑍍𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑌾𑌨𑌾𑌂 𑌤𑌤𑍋 𑌭𑌵𑌤𑌿 𑌭𑌾𑌰𑌤 ॥
𑌸𑌰𑍍𑌵𑌯𑍋𑌨𑌿𑌷𑍁 𑌕𑍌𑌨𑍍𑌤𑍇𑌯 𑌮𑍂𑌰𑍍𑌤𑌯𑌸𑍍𑌸𑌂𑌭𑌵𑌨𑍍𑌤𑌿 𑌯𑌾𑌃 ।
𑌤𑌾𑌸𑌾𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌮𑌹𑌦𑍍𑌯𑍋𑌨𑌿𑌰𑌹𑌂 𑌬𑍀𑌜𑌪𑍍𑌰𑌦𑌃 𑌪𑌿𑌤𑌾 ॥

* பகவத்கீதை 7-வது அத், 4, 5, 6, 7 சுலோகங்கள்.

அதாவது ஸமஸ்த தேசகாலங்களினிடத்தும் வியாபித்து ஸமஸ்தத்தையும் தரிக்கக்கூடிய மாயை ஸகலத்திற்கும் கர்ப்பஸ்தானமாக இருக்கிறதென்பதாகவும் அந்த மாயையினிடம் ஜகத் உத்பத்திக்குக் காரணமான விதையை ஈசுவரன் வைக்கிறார் என்பதாகவும் அக் காரணத்தனால் பிரஹ்மா முதலாயுள்ள ஸமஸ்த பிராணிகளின் உத்பத்தி ஏற்படுகிறதென்பதாகவும், ஸமஸ்த ஜாதிகளிடத்தும் ஏற்படும் சரீரங்களுக்கு மூலப்பிரகிருதியே காரணம், அதாவது தாய் என்பதாகவும், ஈசுவரன் விதைபோட்டவர் அதாவது பிதா என்பதாகவும் கருத்து.

3. ஸ்ருஷ்டியானது புருஷப்பிரகிருதிகளின் ஸம்யோகத்தால் ஏற்படுகின்றது என்ற விஷயம் ஸ்ரீ மஹாதேவர் ஸ்ரீ பார்வதி தேவியாருக்கு உபதேசித்த வண்ணம் அத்யாத்மராமாயணத்தில் கீழ்வரையப்பட்டிருக்கும் சுலோகத்தால் ஸ்பஷ்டமாகிறது.

"ராமஃ பராத்மா புருஷ புராணோ நித்யோதிதஃ
நித்யஸுகஃ பராத்பரோ நிரீஹ।
ஸ்வமாயயா க்ருத்ஸ்நமிதம் விஸ்ருஷ்ட்வா।
நபோவதந்தர் பஹிராஸ்தி தோ யஃ॥
ஸர்வாந்தரஸ்தோ அபி நிகூட ஆத்மா।
ஸ்வமாயயா ஸ்ருஷ்டமிதம் விசஷ்டே॥"

இந்தப் பிரகிருதி த்வயத்தையே ஆங்கிலேய பாஷையில் மாட்டர், எனர்ஜி (Matter and Energy) என்பார்கள்.

இக்காரணத்தினால் ஜகத் உத்பத்திக்குக் காரணமாயுள்ள மேலே உதாஹரிக்கப்பட்ட புருஷப்பிரகிருதிகளில், புருஷனை ஜகத்பிதா வென்பதாகவும் பிரகிருதியை ஜகன்மாதா என்பதாகவும், அறிஞர்கள் வியவஹரிப்பார்கள். இப்புருஷப்பிரகிருதிகளின் ஸம்மேளநத்தாலே ஸ்தூலஸூக்ஷ்ம லோகங்களெல்லாம் ஏற்பட்டு நாமரூபங்களை அடைந்திருக்கின்றன. இந்தப் புருஷப் பிரகிருதிகள், ஸம்மேளந மின்றி பிரிந்து விடுமாகில் ஸமஸ்த லோகங்களும் லயத்தை அடைந்து நாமரூபங்கள் நசிக்கும்.

4. தேவாலயங்களில் நடத்தப்படும் கல்யாணோத்ஸவங்கள் மேலே உதாஹரிக்கப்பட்ட பர அபர பிரகிருதிகளுடையவும் பரமாத்மாவினுடையவும் ஜகத் உத்பத்திக்கு ஹேதுவான சேர்க்கையை ஸூசிப்பிக்கிறது. நாம ரூபங்களுள்ள பிரபஞ்சத்தில் பிறந்து வளர்ந்து நாமரூபத்தை அடைந்த வஸ்துக்களையே எப்பொழுதும் மனத்தின்கண் நிறுத்தித் தொழிற்களை நடத்திக்கொண்டிருந்த ஜநங்கள் நாம ரூபங்கள் இல்லாத ஸ்திதியில் அவ்வித சக்திகளையும் பரமாத்மாவையும் மனத்தில் நிறுத்தி ஆராதிப்பது வெகு கஷ்டமானபடியால் சக்தித்வயத்தை நாமரூபமுள்ள இரண்டு ஸ்திரீவிக்கிரஹங்களாகவும் பரமாத்மாவைப் புருஷ விக்கிரஹமாகவும் ஏற்படுத்தி அந்த விக்கிரஹங்களினிடம் பகவத் பக்தியைச் செய்து மனத்தை நிறுத்தி ஜகத்காரணமான மேலே உதாஹரிக்கப்பட்ட சக்திகளுடையவும் ஆத்மாவினுடையவும் சேர்க்கையை ஸூசிப்பிக்கும் கல்யாணோத்ஸவத்தை நடத்தி ஜநங்கள் ஆநந்திப்பார்கள். மேலே உதாஹரிக்கப்பட்ட சக்திகள் பரமாத்மாவை ஆதாரமாகக்கொண்டிருக்கின்றமையாலும் பரமாத்மாவை விலகின சக்திகளுக்கு ஸ்வதந்த்ரம் இல்லாமையாலும் அவைகளை ஸ்திரீ விக்கிரஹங்களாகவும் அவைகளுக்கு ஆதாரபூதமாயுள்ள பரமாத்மாவை புருஷ விக்கிரஹமாகவும் ஏற்படுத்தினார்கள். ஈசுவர சக்தியை ஸூசிப்பிக்கும் ஸ்ரீஸீதாதேவி, பரமாத்மாவின் ஸந்நிதாநவீக்ஷண்ய பலத்தால் மாத்திரமே அன்றித் தனக்கு வேறுவித ஸ்வதந்த்ர சக்தியில்லை என்பதாக ஸ்ரீ ஆஞ்சநேயஸ்வாமிக்குப் போதித்ததாக அத்யாத்ம ராமாயணத்தில் கூறப்பட்டிருக்கிறது.

𑌮𑌾𑌂𑌵𑌿𑌦𑍍𑌧𑌿 𑌮𑍂𑌲𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌿𑌂𑌸𑌰𑍍𑌗𑌸𑍍𑌥𑌿𑌤𑍍𑌯𑌨𑍍𑌤𑌕𑌾𑌰𑌿𑌣𑍀𑌂।
𑌤𑌸𑍍𑌯𑌸𑌨𑍍𑌨𑌿𑌧𑌿𑌮𑌾𑌤𑍍𑌰𑍇𑌣𑌸𑍃𑌜𑌾𑌮𑍀𑌦𑌮𑌤𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌤𑌾॥

5. இக்கருத்தையே ஸ்ரீகிருஷ்ணன் கீதை 9-வது அத்யாயம் 10-வது சுலோகத்தால் போதிக்கிறார். இச்சக்திகள் விஷ்ணு ஆலயங்களில் ஸ்ரீதேவி, பூதேவி என்ற நாமங்களாலும் சிவாலயங்களில் கங்கா, பவானி என்ற நாமங்களாலும் வழங்கப்படுகின்றன. பண்டிதர், பாமரர் எல்லோரையும் ரக்ஷிக்க வேண்டுமென்ற நோக்கத்துடன் நமது பூர்வீகர்கள் இவ்வித ரஹஸ்யார்த்தங்களை அடக்கி

யுள்ள ஸத்கர்மங்களை ஏற்படுத்தினார்கள். இவ்வித ரஹஸ்யார்த்தத்தை அடக்கியுள்ள கல்யாணோத்ஸவத்தை நடப்பித்துப் பிரஜைகள் ஏன் ஆநந்தப்படவேண்டுமென்பதாகச் சிலர் கேட்கலாம். அநாதியாயுள்ள கோடாநுகோடி ஜீவராசிகள் பிரளயாவஸ்தையில் அதாவது ஸ்ருஷ்டி ஒழிந்திருந்தகாலத்தில் தமது கர்ம வாஸனைகளுடன் பிரகிருதி என்ற அவித்யையினிடம் மூழ்கியிருப்பார்கள். அவ்வித ஜீவர்களை கிருதார்த்தர்களாகச் செய்தும் முக்தர்களாகச் செய்தும் அநுபவிப்பதற்கு யோக்கியமான சாசுவத ஆநந்தத்தை அளிக்கவேண்டு மென்பதாகப் பரமாத்மா இச்சித்துத் தன்னிடம் லீநமாயிருக்கும் மேலே சொன்ன சக்திகளாலே ஸ்ருஷ்டியை ஆரம்பித்து பலவித லோகங்களை ஸ்ருஷ்டிப்பார். அந்த லோகங்களினிடமாக ஜீவர்கள் அவர்களது கர்ம வாஸனைகளாலே ஜநநத்தை அடைந்து காலக்ரமத்தில் அவித்யையைக் கடந்து ஞாநத்தால் ஆத்மஸாக்ஷாத்காரத்தை யடைந்து முக்தர்களாகிறார்கள். பரமகிருபாநிதியாகிய பரமாத்மா இவ்வித மஹத்தான உபஹாரத்தை அளிக்கவெண்ணித் தனது மாயாசக்திகளுடன் கூடி ஸ்ருஷ்டிசெய்கிறார்.

ஆகையால் இவ்வித பேருபஹாரத்தை யநுபவிக்கும் ஜீவர்களாகிய நாம் நமது நன்றியையும் பக்தியையும் விருத்தி செய்துகொண்டு நமது நலத்தின் பொருட்டு ஈசுவரன் செய்யும் கிரியைகளை அடிக்கடி ஸ்மரித்து, ஆநந்தத்தை அடைவது நமது கடமையாகவிருக்கின்றது. இவ்விதம் செய்வதால் ஜீவர்களுக்கு ஜந்மஸாபல்யம் சீக்கிரம் உண்டாவதற்குக் காரணமாகும். இக்கல்யாணோத்ஸவங்கள் பிரதிஸம்வத்ஸரமும் நடத்தப்படுவதாலே ஸ்ருஷ்டி பிரளயம், இரவு பகல் போலவே ஸ்வாபாவிக மென்பதாகவும் மாறாமல் நிகழ்ந்து கொண்டிருக்கும் என்பதாகவும் கிரஹிக்கக் கூடியதாயிருக்கிறது.

வி. ராமசந்திர நாயுடு.

திருவள்ளுவரும் சமரசசன்மார்க்கமும்.

1. உத்தம நாகரிகம் வாய்ந்த இத்தமிழ் உலகின்கண் இற்றைக்குச் சற்றேறக்குறைய ஆயிரத்தெண்ணூறு வருஷங்களுக்கு முன் ஞானதிவாகரனாய் விளங்கிய ஆசிரியர் திருவள்ளுவனாரின் பெருமையும் அவர் அருளிய திருக்குறளென்னுந் தெய்வப்பனுவலின் அருமையும் நன் மக்கள் ஒவ்வொருவர் உள்ளத்தையும் வளம்படுத்தி மகிழ் செய்வவாயின, அன்றுமுதல் ஒவ்வொரு சாதியாளரும், ஒவ்வொரு சமயிகளும் திருக்குறளைத் தங்கள் தங்கள் நூலென்றும், வள்ளுவரைத் தம்மவர் தம்மவரென்றும் கூறிப்போதருகின்றனர். தமிழ்மொழிவழங்காப் பிறதேய மாந்தரும் நந்தமிழ்மறையை நன்கு படித்துத் தத்தம் பாஷைகளில் மொழிபெயர்த்தும் ஆராக்காதலுடன் பாராட்டி வருவாராயின் அஃது எம்மாலெத்துணைப்பாராட்டப் படுவதொன்றாம்? உலகில் மக்களெனப்பிறந்தார் ஒவ்வொருவரும் அதனைப் பொதுவே போற்றிப்புகழ்ந்து கூறிவரினும் தமிழ் இலக்கண இலக்கிய வழிகொண்டு ஐயந்திரிபறக் கற்றுக்கேட்டுணரும் பெருந்தகைமை யுடையார்க்கே அதனருமை பெருமைகள் அளவுபடாவாய்த் தோன்றுவனவாம்.

2. திருக்குறள் மதுரையில் அரங்கேறிய காலத்தில் நிகரற்ற கல்வியாளராய்த் தமிழுக் கரசராய் வீற்றிருந்த சங்கப்புலவர் நாற்பத்தொன்பதின்மரும் செவியாரக்கேட்டு மனமாரவுவந்து வாயாரப் புகழ்ந்துள்ள பாடல்களினால், அது பிறந்த பொழுதே ஆட்சி செலுத்தும் பெருமதிப்புற்றமை விளங்கும். அவர்கள் இதனை வேதமென்றும், வேதத்தின் மிக்கதென்றும், அமுதமென்றும், அமுதத்தின் மிக்க சுவையுள்ளதென்றும், அகஇருள் நீக்கும் திவாகரனென்றும், எல்லாப்பொருளும் இதன்பாலுள்ளனவென்றும் இதன்பாலில்லாத வெப்பொருளுமில்லையென்றும், இந்நூலொன்றே கற்கத்தகுந்ததென்றும், மற்றும் பலவாறும் பாராட்டிக் கூறியிருக்கின்றனர்.

3. இது, அக்காலத்திற்றானே அசைக்கவொண்ணாத பிரபல பிரமாண நூலாயிற்றென்பது கடைச்சங்கப் புலவருளொருவராகிய சாத்தனார் தாமியற்றிய மணிமேகலைக் காப்பியத்துள்

"தெய்வந்தொழா அள்கொழு நற்றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் பெருமழை யென்றவப்
பொய்யில் புலவன் பொருளுரை தேறாய்"

எனக் கூறியிருத்தலால் நன்கு விளங்கும்.

4. இது, யாவருமொருசேரப்புகழும் அத்துணைப் பாடெய்துதற்குக் காரணம் "குன்றக் கூறல்" முதலிய குற்றமொன்று மின்றிச் "சுருங்கச் சொல்லல்" முதலிய அழகெல்லாங்கொண்டு விளங்குதலும், எல்லார்க்கும் ஒத்த பொது நீதிகளைப் பசுமரத்தாணி அறைந்தாற் போற் பதியக் கூறுதலுமாம். உலகிலுள்ள மாந்தரனைவரும் செந்நெறி கடைப்பிடித்துய்யவேண்டுமென்னும் பெருங்கருணையுடைய வள்ளலாகிய நம்மாசிரியர் சுருதி,ஸ்மிருதி புராணேதிகாசங்களின் சாரமான பொருள்களையெல்லாமெடுத்து ஒவ்வொரு சாரார்க்கே உரிய சிறுபான்மையான சிறப்பியல்புகளை ஒழித்துத் தூய்மை செய்து எல்லார்க்கும் ஒத்தனவும் உறுதி பயப்பனவுமான நீதிகளைத் திரட்டி வெளிப்படுத்துவாராயினர். இவ்வுண்மை:—

"சமயக்கணக்கர் மதிவழிகூறா
துலகியல் கூறிப்பொருளிதுவென்ற
வள்ளுவன்" எனக் கல்லாடத்தும்,
"ஒன்றே பொருளென்னின் வேறென்ப வேறென்னின்
அன்றென்ப வாறு சமயத்தார்—நன்றென்ன
எப்பாலவருமியைபவே வள்ளுவனார்
முப்பான் மொழிந்த மொழி"

எனத் திருவள்ளுவமாலையினுமுள்ள கல்லாடர் திருவாக்குகளால் விளக்கமுறும்

5. மனு முதலிய ஸ்மிருதிகளிலும் மகாபாரதத்திலுமுள்ள எத்தனையோ பல நீதிகளை நாயனார் தழுவியுள்ளாரென்பதுண்மையே. உதாரணமாக:—

(1) அவிசொரிந் தாயிரம் வேட்டலி னொன்றன்
உயிர்செகுத் துண்ணாமை நன்று.

(2) மழித்தலு நீட்டலும் வேண்டா வுலகம்
பழித்த தொழித்துவிடின்.

(3) நன்றாகு மாக்கம் பெரிதெனினுஞ் சான்றோர்க்குக்
கொன்றாகு மாக்கங் கடை.

(4) கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ்
களைகட் டதனொடு நேர்.

(5) ஈன்றாள் பசிகாண்பா னாயினுஞ் செய்யற்க
சான்றோர் பழிக்கும் வினை.

என்பன மனுஸ்மிருதியின் பொருளைக்கொண்டுவந்தன காண்க. அங்ஙனம் ஸ்மிருதி யாசாரங்களைக் கொள்ளுமிடத்தும் அதிகாரிபேதம் முதலியனபற்றி அவற்றைத் தூய்மைப்படுத்தி யுரைத்தலுமுணர்க.

6. இனி, இவர் பொருட்பாகு பாட்டினை அறம்பொருளின்பமென வடநூல் வழக்குப்பற்றி ஓதினாரெனப் பரிமேலழகருரைத்தார் எனினும், தமிழ் வழக்குப்பற்றி ஓதினாரெனல் பெரிதும் பொருத்தமாம். என்னை? வடநூல் வழக்குப்பற்றி யோதினாரெனில் வீட்டுப்பாலெனவொன்று கூறல் வேண்டும்; அங்ஙனங் கூறாமையானும், பொருளினை அகம்புறமெனப்பகுத்து அகத்தின் கண் இன்பமும், புறத்தின்கண் அறனும் பொருளுங்கூறிப் புறத்தின் பகுதியாகிய காஞ்சித்திணைக்கண்ணே அவற்றது நிலையின்மை கூறுந்தமிழ் வழக்குப்பற்றி ஆசிரியர் வீடு ஒழிய ஏனை மூன்றுமேகூறி அவற்றின் நிலையின்மையைப் புறத்தைச் சாரவைத்தமையானுமென்பது. இவ்வுண்மை பொருளதிகாரவாராய்ச்சி யுடையார்க்கு நன்கு புலனாம். வீட்டினை யிலக்கணவகையாற் கூறுதல் தமிழ் வழக்கன்றென்பதனைப் பரிமேலழகரும் நச்சினார்க்கினியரும் உரைத்தவுரைகளாலும் உணர்க. அங்ஙனமாயினும் தெய்வப் புலவர் அகம்புறமெனப் பகுத்துப் பெயர்கொடாமையானும், முதற்கண் வைக்கற்பாலதாகிய வின்பத்தினை யிறுதிக்கண்வைத்தமையானும் பரிமேலழகர் "வடநூல் வழக்குப்பற்றி" யெனக்கூறியதுஞ் சாலுமாயிற்று.

7. உலகியலின் வழுவாதொழுகிப்பின் அவற்றது நிலையின்மை கண்டு பிறப்பினை யஞ்சித்துறவு எய்தி அவாவறுத்தாரால் ஒரு தலை

யான் எய்தற்பாலதாகிய வீட்டினைப் பண்டைத்தமிழ்மக்கள் இலக்கணவகையாற் கூறுது ஒழிந்தது ஜன சமூகத்தின் சமாதான வாழ்க்கையை விரும்பிய அன்னவரின் நாகரிக முதிர்ச்சியை விளக்குமேயன்றிப் பிறிதில்லை. ஞான சாஸ்திரம் பயிலத்தொடங்கிய இக்காலத்துச் சமாதான மின்மை மிக்கு வருதல் கண்கூடாகலான் எனினும் "மறுவில்செய்தி மூவகைக்காலமும் நெறியினாற்றியவறிவ" ராகுஞ் சேந்நாப்போதார் வீட்டிய வினைச்சிறிதுங் கூருதொழிந்தாருமல்லர்.

(8) இனி, தெய்வப்புலவர் எல்லாருக்கும் ஒத்த நீதிகளைக் கூறிப்போந்தாரெனவே அவர்தாம் ஒரு சமயத்திற் கட்டுண்டவரன்றி யெல்லாச்சமயங்களையும் ஒருங்கொப்பக் கொண்டவராவாரெனின் அது பொருந்தாது. உலகியலே ஒருபடித்தாக முழுவதும் ஒத்திருப்பதில்லை. உலகிலுள்ள மாந்தரோவ்வொருவரும் அறிவு முதலியவற்றில் வேறுபட்டவராயே யிருப்பர். அவர்கள் தம்முடைய அறிவு முதலியவற்றின் வன்மை மென்மைகட்கேற்ப வெவ்வேறு வகையான உத்தியோகங்களை மேற்கொண்டு ஏற்றமுந் தாழ்வுமான பலப்பேறுடையராதலுமுண்மை. அங்ஙனமே அனைவரும் கர்மத்தாலும் அறிவாலும் ஒத்தவராகார். அவற்றிற்கேற்ப அவர்கள் நின்றொழுகத்தக்க சமயங்கள் பலவும் உலகிற்கின்றியமையாதனவே. அவையெல்லாம் ஒத்தனவாகா. வள்ளுவனாரும் ஒரு சற்சமயத்தை யடைந்தே யிருக்கவேண்டும்.

(9) ஆயின் சமரச சன்மார்க்கம் என்பது நன்னெறியெனின் அது வேறெச்சமயத்தையும் விரோதியாத நலப்பாடமைந்த மெய்ச்சமயமென்றே கொள்ளத்தகும். இவ்வுண்மை கருதியன்றோ!

சன்மார்க்க ஞானமதின் பொருளும் வீறு
சமயசங் கேதப் பொருளுந் தானென்ருகப்
பன்மார்க்க நெறியினிலுங் கண்ட தில்லை
பகர்வரிய தில்லைமன்றுட் பார்த்த போதங்
கென்மார்க்க மிருக்குதெல்லாம் வெளியே யென்ன
வெச்சமயத் தவர்களும்வந் திறைஞ்சா நிற்பர்
சன்மார்க்க நெஞ்சமுள வெனக்குந் தானே
கண்டவுட னனந்தங் காண்ட லாகும்.

என்னுந் திருவாக் கெழுவதாயிற்று. அவரவர் கர்மபரிபாகத்திற் கேற்பப் பலமதங்கள் வேண்டுவனவேயென்றும், எல்லாமதங்களும் மேலான ஒப்பற்ற லக்ஷியத்தை யடைதற் கமைந்த சோபானங்களே யென்றும், தத்தம் நெறியின் வழுவா தொழுகினரனைவரும் அதனை யடைத லொருதலை யென்றும், எல்லாருக்குஞ் சித்தி முத்திகளைத் தரத்தக்க தனிமுதற் பரம்பொரு ளொன்றே யென்றும் உணர்ந்து ஒவ்வொருவரும் தத்தம் நெறியினின்று வழுவிக்கேடுறுவண்ணம் உபதேசித்தலே சன்மார்க்கரின் கடமையாகும். அத்தகையரே நம் நாயனாரும் என்க.

10. நாயனார், பௌத்தர், ஜைனர் முதலியோரில் ஒருவராகாரென்பதைப்பற்றிச் சேதுஸம்ஸ்தான வித்வான் ஸ்ரீமத் ரா. இராகவையங்காரவர்கள தக்கநியாயங்காட்டி முன்னரே யெழுதியிருத்தலின் அவர் வேதவழிப்பட்ட ஓர் மதத்தினரென்பதே துணிபு. நாயனார் சைவரல்லர் என்றுவது வைஷ்ணவரல்லர் என்றுவது கூறுதற்குத்தக்க ஆதாரமொன்றுமேயில்லை. அவர், வேதத்தையும் வேதவழித்தான வேள்வியையுங் குறித்திருக்கிறார். திருமால் உலகளந்தது, இந்திரன் சாபம் எய்தியது முதலிய புராணக்கதைகளையுங் கூறியிருக்கிறார் அந்தணர் முதலிய நான்கு வருணத்தையும் அங்கீகரித்திருக்கிறார். பிரமசரியம் முதலிய நால்வகை நிலையினையும் மேற்கொண்டுமுள்ளார். அந்தணர்க்கு ஆறுதொழிலுண்டென்பதும், அவர் வேதத்தை மறக்கலாகாதென்பதும், அவர் ஒழுக்கத்தில் தவறின் வருணமே கெட்டுவிடுமென்பதும் அவராற் கூறப்பட்டுள்ளன. அரசன் கொடுங்கோலனாயின் அவனாட்டிற் பருவமழை பெய்யாதென்று சொல்லியுளார். வாணிகத்திற்குப் பிறர் பொருளையுந் தம்பொருள்போற் பார்க்கும் நீதி வேண்டுமென்றனர். எல்லாத்தொழிலினும் உழவு தொழிலையே தலையாய தொழிலெனப் புகன்றனர். தேவர்கட்குப் பூசனையும் திருவிழாக்களும் செய்யவேண்டுமென்பதும், பிதிர்க்கடன் இறுக்கவேண்டு மென்பதும் ஆசிரியர்க்குடன்பாடே. பஞ்சதந்மாத்திரை முதலிய தத்துவங்களை ஆராய்ச்சி செய்யின் பிரபஞ்ச வுண்மையறியப்படுமென்று கூறுகிறார். வாதபித்த சிலேத்துமங்கள் இன்னகாலத்தில் துன்பஞ்செய்யுமென்ற மருத்துவ நூற்கொள்கையை யெடுத்துக்

காட்டுகிறார். ஒரு பிறப்பிற் செய்த வினையின் பயன் எழுபிறப்பு வரையில் தொடருமென்பது மவர் கருத்தாகும். உரிய இடங்களிற் சைவாகமங்களின் கருத்துக்களைத் தழுவுகிறார். இவற்றிற்கெல்லாம் உதாரணம் திருக்குறளில் கண்டுகொள்க.

11. இனி, பகவன், வாலறிவன், வேண்டுதல் வேண்டாமையிலான், இறைவன், ஐந்தவித்தான், தனக்கு உவமையில்லாதான், அறவாழியந்தணன், எண்குணத்தான், பற்றற்றான், மெய்ப்பொருள் உள்ளது, செம்பொருள் என்ற பெயர்களாற் பசுபதியாகிய தனி முதல்வனையுணர்த்தி அவனிலக்கணங்களைத் தொகுத்தும் வகுத்தும் கூறியருளினர். 'தனக்குவமையில்லாதான்' எனவே முதல்வன் ஒருவனே யென்பது ஆசிரியர் கருத்தாயிற்று. பரிமேலழகரும் "பொருள்சேர்புகழ்" என்பதற்கு இறைமைக்குணங்களிலராயினாரை யுடையரெனக்கருதி அறிவிலார் கூறுகின்ற புகழ்கள் பொருள் சேராவாகலின் அவை முற்றவுமுடைய இறைவன் புகழே "பொருள் சேர்புகழ்" எனப்பட்டது என்றும், "எண்குணங்களிவை யெனவுணர்த்தியபின்னர் "இவ்வாறு சைவாகமத்திற் கூறப்பட்டது" என்றுங் கூறுவாராயினர். தெய்வப்புலவர் இங்ஙனங் கடவுளைக் கூறியவிடங்களில் ஓரிடத்தேனும் எம்மதத்தினரும் விரோதியாவாறு குறிப்பித்துச் சென்றமையே அவரது சமரச நிலையினை நன்கு விளக்குவதாயிற்று.

12. முதற் குறளினாலே உலகிற்கு நிமித்த காரணனாகிய பதியும், அவனாற் காரிடப்படும் பிரபஞ்சத்திற்கு முதற் காரணமாகிய மாயையும், அப்பதியையும் பிரபஞ்சத்தையு மறிந்தநுபவிக்கும் பசுக்களுமுளவென்பது பெறப்பட்டது. "இருள்சே ரிருவினையும்," "மருளானா மாணாப்பிறப்பு" என்னும் பிரமாணங்களால் இருள், மருள் என்னும் பரியாய நாமங்களையுடைய அவித்தை அல்லது ஆணவமலம் ஒன்றுண் டென்பதும், அதனைப்பற்றியே இருவினைகள் நிகழுமென்பதும், இருவினையும் பிறவிக்கேது வென்பதும், பிறவியுள்ள காறும் துன்பம் ஒருதலையா னுண்டென்பதும் பெறப்பட்டன. "பிறவிப் பெருங்கடனீந்துவர் நீந்தா ரிறைவனடி சேராதார்" என்னுங் குறளாலும், காரண காரியத் தொடர்ச்சி

யாய்க் கரையின்றி வருதலின் 'பிறவிப் பெருங்கடல்' என்றார்" என்னு முரையாலும் இருவினையும் பிறவியும் தம்முட் காரணகாரியமாய் அநாதி தொட்டே வருகின்றன வென்பதும், இறைவனடியைச் சேர்ந்தே பிறவியறுக்க வேண்டு மென்பதும் பெறப்பட்டன. "வினையின் வந்தது வினைக்கு விளைவாயது" என்பதையுங் காண்க.

13. பொய்யில் புலவராகிய நம்மாசிரியர் உலகியனீதிகளையும் கடவுள் திருநாமங்களையும் அனைவரும் ஒப்புமாறு கூறியதுபோலவே வீடுபெறுதலுக்குச் சிறந்த சாதனமாகிய பிறவேதக்களையுங் கூறிப் போதருமாற்றல் எம்மாற் புகழப்படுவ தொன்றோ?

(1) நில்லாதவற்றை நிலையின வென்றுணரும்
புல்லறிவாண்மை கடை.

(2) யானென தென்னுஞ் செறுக்கறுப்பான் வானோர்க்
குயர்ந்த வுலகம் புகும்.

(3) பொருளல்ல வற்றைப் பொருளென் றுணரு
மருளானு மாணாப் பிறப்பு.

(4) அவாவில்லார்க் கில்லாகுந் துன்பமஃ துண்டேற்
றவாஅது மேன்மேல் வரும்.

என்னுந் திருவாக்குகளைச் சைவர், வைஷ்ணவர், வேதாந்திகள், பௌத்தர், ஜைனர் முதலியோரில் உண்மை யெனப் போற்றாதார் யாவர்? இங்ஙனம் யாவர்க்கும் பொதுவே கூறிச்செல்லும் நயம் "வேண்டும்பனுவற் றுணிவு," "நூலோர் தொகுத்தவற்றுள்" "பல்காற்றுற் றேரினும்" என்னும் பிரமாணங்களாலும் வலியுறுவதாகும். தெய்வப்புலவரதுண்மைக் கருத்தை யுணர்ந்த ஆசிரியர் பரிமேலழகியாரும் "பனுவலெனப் பொதுப்படக் கூறியவதனால் ஒன்றையொன் றொவ்வாத சமய நூல்க ளெல்லாவற்றிற்கும் இஃதொத்த துணிபென்பது பெற்றாம்" என்றும், எல்லா நூல்களினும் நல்லன வெடுத்து எல்லார்க்கும் பொதுப்படக் கூறுதல் இவர்க்கியல்பாகலின் ஈண்டும் பொதுப்பட 'நூலோர்' என்றும்,

"ஒன்றை யொன்றொவ்வாத சமய நெறிகள் எல்லாவற்றுனு மாராய்ந்தாலும் துணையாவது அவ்வருளே" யென்றும், மயங்கிய வழிப்பேய்த் தேரிற் புனல்போலத் தோன்றி மெய்யுணர்ந்த வழிக் கயிற்றி லரவுபோலக் கெடுதலிற் பொய் யென்பாரும், நில்லவேறு பட்டுவருதலாற் கணந்தோறும் பிறந்திறக்கு மென்பாரும், ஒருவாற்ருன் வேறுபடுதலும் ஒருவாற்ருன் வேறுபடாமையும் உடைமையின் நிலையுதலும் நிலையாமையும் ஒருங்கே யுடைய வென்பாரும் எனப்பொருட் பெற்றி கூறுவார் பலதிறத்தராவார்; அவரெல்லார்க்கு மவற்றது நிலையாமை யுடம்பாடாகலின் ஈண்டு அதனையே கூறுகின்ருர்" என்றும் உரைவிரிப்பா ராயினர்.

14. உலகப் பொருள்களின் நிலையாமையை உணரவேண்டு மென்பதும் உணர்ந்த துணையானே அவற்றின் மேலுள்ள பற்றுக்களையும் தாம் நுகர்தற்கு வைத்திருந்த அப்பொருள்களையும் ஒருங்கே துறக்கவேண்டும் என்பதும், அங்ஙனந் துறத்தற்கு உபாயம் பற்றற்ருன் பற்றினைப் பற்றித் தியான சமாதிகளைச் செய்தலே என்பதும், அவ்வாறு பற்றுக்களை விட்டு மனம் ஒருவழிப்பட்டவிடத்தும் சந்தேக விபரீதங்களைப் போக்கி மெய்யுணர்தா லன்றிப் பயனில்லை என்பதும், மெய்யுணர்வின் இலக்கணமாவது காணப்படுகிற எந்தப் பொருளினிடத்தும் காரணகாரியம் இரண்டுமின்றி முடிவாய் நிற்கும் முதற் பொருளைக் காண்டலே என்பதும், அவ்வாறு பதிஞானம்பெறுதலுக்குக் கேள்வி விமரிசம் பாவனை யென்ற மூன்று உபாயங்களைச் செய்யவேண்டும் என்பதும், அவற்றினைச் செய்து பதியையுணர்ந்து ஸோஹம் பாவனை செய்யவே அவித்தை வலிகுன்றி ஸஞ்சித கர்மம் ஒழியும் என்பதும், பின் ஆகாமி ஏருது என்பதும், பின்னுந் தடையாயுள்ளது பிராரப்த வாசனையொன்றே என்பதும், அதனையும் இடையருத மெய்ப்பொருளுணர்வால் அறுத்துத் திருவருளில் அதீதப்பட்டு நிற்றலாகிய அதுவே பரமுத்தி என்பதும் தெய்வப் புலமைத் திருவள்ளுவ நாயனுரால் நன்கு விளக்கப்பட்டுள்ளன.

15. நாயனுருக்குப் பிற்காலத் தவர்களில் திருக்குறளின் சொல்லையும் பொருளையும் எடுத்துக் கோத்துத் தத்தம் நூல்களை

அழகுபடுத்தாத ஆசிரியர் யாருமில்லை. சைவத் திருமுறைகளி லும், வைஷ்ணவப் பிரபந்தத்திலும் திருக்குறளின் சொற்பொருள் கள் ஏறுவவாயின. தமிழின்கண் சைவசித்தாந்த சாஸ்திரங்களை யருளிச் செய்த திருக்கடவூர் உய்யவந்த தேவநாயனர், சீகாழிக் கண்ணுடைய வள்ளலார், கொற்றவன்குடி உமாபதி சிவாசாரியர் முதலாயினு ரெல்லாம் திருக்குறளைச் சென்னியிற் கொண்டு போற் றினர்கள். "தலைப்பட்டார் தீரத் துறந்தார் மயங்கி வலைப்பட் டார் மற்றையவரென்று நிலைத்தமிழின், செய்வப்புலமைத் திரு வள்ளுவருரைத்த மெய்வைத்தசொல்" எனப் போற்றினர் உமா பதி சிவம்.

"கலைமகள் வாழ்க்கை முகத்ததெனினும் மலரவன் வண்டமி ழோர்க் கொவ்வான்" என்னுந் திருவாக்குப் பிறர்திறத் தெவ்வன மாயினும் நம்மாசிரியர்க்காயின் உண்மையாமன்றோ? உருத்திர சன்மர் உடனிருந்து கேட்டதும், இறையனாரும் கலைமகளாரும் புகழ்ந்தது மாகிய பொய்யா மொழியின் மாண்பினை யுடம்பெல்லா நாவாகக் கொண்டு ஊழிகாலமெல்லா முணரலா முரைக்கலா குமோ?

தேவர் குறளுந் திருநான் மறைமுடிவும்
மூவர் தமிழு முனிமொழியும்—கோவை
திருவாசகமுந் திருமூலர் சொல்லும்
ஒருவாசக மென் றுணர்.—ஔவையார்.

சுபம்.

மு. வேங்கடசாமி நாட்டார்.

ராமாயண கதாபுருஷர்களின் குணாதிசயங்கள்.

முக்கியமாய் பரதனைப்பற்றியவை.

(188-ம் பக்கத் தொடர்ச்சி.)

நான் அக்நியிலாவது வடவாமுகத்திலாவது ஸமுத்திரத்திலாவது விழுந்திறப்பதே யுக்தமென்றும் எங்கே போனாலும் குரங்கின் குணமானது இவ்விதமாகத்தானே அடங்காத தன்மையாயிருக்கிறதென்றும் வருந்தினான். பிறகு இராவணன் கொல்லப்பட்டபிறகு இராமன் ஜயமடைந்ததைக் கூறுவதற்காக ஹநுமான் ஸீதையினிடம் சென்றபோது இராக்ஷஸிகளையெல்லாம் கொன்றுவிட முயன்று ஸீதையினுடைய அநுமதியைக் கேட்டான். அதைக் கேட்ட ஸீதை "அவர்களைக் கொல்லுவது உசிதமன்று. அவர்களுடைய அரசனிட்ட ஆக்ஞைக்கு அடங்கி நடந்தவர்களே தவிர தாமாக ஒன்றும் செய்யவில்லை. நான் முன்செய்த கர்மபலனை நான் அநுபவித்தேன். இவர்கள் இராவணனுடைய ஆக்ஞையைக் கொண்டு எனக்குச் சில தீங்குகளைச் செய்தபோதிலும் அவனிறந்த பிறகு எனக்கு அவர்கள் ஒருதீங்கும் செய்யார்கள். உலகத்தில் அபராதம் செய்யாதவன் ஒருவனுண்டா? கெடுதி செய்தவனுக்கும் சமயம் வந்தால் நன்மையைச் செய்வதே பெரியோர்களின் குணம்" என்று உபதேசம் செய்த பின்னர் ஹநுமானுக்கு மேலான அறிவு வந்ததாகத் தெரிகின்றது. இவ்விதமாக ஹநுமானிடத்தில் ரஜோ குணமும் தமோகுணமும் பிரகாசித்து நின்றனவென்று வெளியாகின்றது.

8. விபீஷணனைப்பற்றியோ வென்றால் அவனுடைய தன்மையை ஸ்ரீராமனே ஆராய்ந்து கீழ்வருமாறு பேசியிருக்கின்றார்.

"பகைவரா யிருந்தவர்களும், தாயாதிக்காரர்களும், அடுத்தவீடு அல்லது அடுத்த ஊர்க்காரர்களும் ஒருவனுக்கு விரோதிகள். அவனுக்கு கஷ்டகாலம் வரும்பொழுது அவர்கள் தான் கையில் ஆயுதம் கொண்டு அடிக்கிறவர்கள். விபீஷணன் இராவணனுடைய தாயாதிக்காரன். இராவணனுக்கு எப்பொழுது கஷ்டகாலம் வருமென்று எதிர்பார்த்திருந்தான். அவன் இராஜ்யத்தை அபேக்ஷித்து வரு

கின்றான். அந்த இராஜ்யத்தில் நமக்கு விருப்பமில்லை. நாம் அவனுக்கு தாயாதிக்காரர்களல்லவாகையால் அவன் நமக்கு ஒரு தீங்கும் செய்யமாட்டான். மேலும் இப்பொழுது அவன் எந்த எண்ணத்தையுடையவனு யிருந்தாலும் பின்னர் யோக்யனுக ஆகிவிடுவான்" என்பதாகும். ஜிஹாஸெநவஸஂப்ராவ்ரு: என்று சொல்லப்பட்டபடி விபீஷணன் மேலான நோக்கத்துடன் வந்ததாக அவன் பாவனை காட்டினுலும், இராஜ்யத்தை அடைய விரும்பியே அவன் வந்ததாக அவனுடைய வசநத்தினுலேயே வெளியாகின்றது. அதாவது இராமனும் இலக்ஷ்மணனும் இந்த்ரஜித்தினுடைய நாகாஸ்திரத்தினல் கட்டுப்பட்டு மயங்கி விழுந்த சமயத்தில் விபீஷணன் அடியில் வருமாறு பிரலாபித்தான்:—

"யாருடைய வீர்யத்தை ஸஹாயமாகக்கொண்டு பெருமையை யடைய நான் நினைத்தேனே அந்த இரண்டு வீரர்களும் உடலழியும் விதமாகப்படுத்துவிட்டார்கள், எனக்கு உயிரிருந்தும் நான் ஆபத்தை யடைந்துவிட்டேன். இராஜ்யம் கிடைக்குமென்று நான் கொண்டிருந்த ஆசையும் நாசமடைந்து விட்டது. இராவணன் செய்த பிரதிக்ஞை நிறைவேறி அவனுடைய இஷ்டப்படி முடிந்து விட்டது" என்பதாகும்.

9. இவ்விதமாக இராமனிடத்தில் அளவிறந்த பக்தியைச் செலுத்தினவர்களாகிய இலக்ஷ்மணன், ஸீதை, சுக்ரீவன், ஹநுமான், விபீஷணன் இவர்களிடத்தில் பொருந்தியிருந்த ரஜோகுண தமோகுண ஜந்யமான பிழைகள் ஒன்றுகூட பரதனிடத்தில் பொருந்தவில்லை. அவன் எப்பொழுதும் ஸாத்விக குணத்திலேயே விளங்கி இராமனுடைய பெருமையையும் தர்மசுபாவத்தையும், சீலத்தையும், பக்தியுடன் பூஜித்து இராமனுக்கு வழிபாடு செய்வதைத் தவிர வேறு எந்தச் செயலிலும் நோக்கமில்லாதவனுக விருந்திருக்கிருன்.

முதலாவது அவதார கட்டத்தில் பரதன் விஷயமாகவும், இலக்ஷ்மணன், சத்ருக்நன் இவர்கள் விஷயமாகவும் வால்மீகி பகவான் சொல்லுவதை ஆராயவேண்டும்.

𑌭𑌰𑌤𑍋𑌨𑌾𑌮𑌕𑍈𑌕𑍇𑌯𑍍𑌯𑌾𑌂𑌜𑌜𑍍𑌞𑍇𑌸𑌤𑍍𑌯𑌪𑌰𑌾𑌕𑍍𑌰𑌮𑌃।
𑌸𑌾𑌕𑍍𑌷𑌾𑌦𑍍𑌵𑌿𑌷𑍍𑌣𑍋𑌶𑍍𑌚𑌤𑍁𑌰𑍍𑌭𑌾𑌗𑌃𑌸𑌰𑍍𑌵𑍈𑌃𑌸𑌮𑍁𑌦𑌿𑌤𑍋𑌗𑍁𑌣𑍈𑌃॥
𑌅𑌥𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑌣𑌶𑌤𑍍𑌰𑍁𑌘𑍍𑌨𑍌𑌸𑍁𑌮𑌿𑌤𑍍𑌰𑌾𑌜𑌨𑌯𑌤𑍍𑌸𑍁𑌤𑍌।
𑌵𑍀𑌰𑍌𑌸𑌰𑍍𑌵𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌕𑍁𑌶𑌲𑍌𑌵𑌿𑌷𑍍𑌣𑍋𑌰𑌰𑍍𑌧𑌸𑌮𑌨𑍍𑌵𑌿𑌤𑍌॥

இதன் பொருள்:—"கைகேயியினிடத்தில் சத்தியத்தையே பராக்கிரமமாக வுடையவனும் அனைவரும் கொண்டாடுகின்ற எல்லா நல்ல குணங்களும் பொருந்தியவனுமான பரதன் பிறந்தான். பிறகு ஸுமித்ரையானவள் வீரர்களும் ஸர்வ அஸ்தர வித்தையிலும் நிபுணர்களுமான இக்ஷ்மணனையும் சத்துருக்கனையும் பெற்றாள், என்பதாகும். இதனால் பரதனுக்குச் சொல்லப்பட்டிருக்கும் விசேஷணத்தையும் இலக்ஷ்மணனுக்கும் சத்துருக்கனுக்கும் சொல்லப் பட்டிருக்கும் விசேஷணத்தையும் ஆராய்ந்து பார்க்கவேண்டும். கம்பனும் திரு அவதாரப்படலத்தில் பரதன்முதல் மூன்று சகோதரர்களும் பிறந்ததைப்பற்றி மூன்று பாடல்களால் வர்ணித்திருக்கின்றார். அவைகளாவன:—

பரதன்:—ஆசையும் விசும்புநின் றமர ரார்த்தெழ
வாசவன் முதலினர் வணங்கி வாழ்த்துறப்
பூசமு மீனமும் பொலிய நல்கினள்
மாசறு கேகயன் மாது மைந்தனை.

இலக்ஷ்மணன்:—தலையவிழ் தருவுடைச் சைல கோமனும்
கிளையுமந் தரமிசை கெழுமி யார்ப்புற
அளைபுகு மரவினே டலவன் வாழ்வுற
இளையவற் பயந்தன ளிளைய மென்கொடி.

சத்துருக்நன்:—படங்கிளர் பஃறலைப் பாந்த ளேந்துபார்
நடங்கிளர் தரமறை நவில நாடகம்
மடங்கலு மகமுமே வாழ்வி னேங்கிட
விடங்கிளர் விழியினுண் மீட்டு மீன்றனள்.

இந்தப் பாடல்களின் கருத்தை ஆராயும் பொழுது பரதனுக்கே உத்தமமான குணங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. ஸ்ரீ இராமனை பரதன் எவ்வாறு பாவித்திருந்தான் என்னும் விஷயத்தை

கம்பன் மிகவும் அழகாக பாலகாண்டத்தின் கடைசியில் விவரித்துச் சொல்லியிருக்கின்றார். அவ்வளவு பெருமையாக மற்ற இருவர்களையும் பற்றிச் சொல்லப்படவில்லை.

ஏவலு மிறைஞ்சிப்போ யிராமன் சேவடிப்
பூவினைச் சென்னியிற் புனைந்து போயினன்
ஆவியங் கவனல தில்லை யாதலான்
ஓவலி னுயிர்பிரிந் துடல்சென் றென்னவே

அதாவது, நீ கேகய நாட்டிற்குச் செல்லவேண்டுமென்று தசரதனுத்தரவு கொடுத்தவுடன் பரதன் இராமனுடைய பாதத்தில் அணிந்திருந்த பூவைத் தன் தலையில் புனைந்துகொண்டு இராமனைக் காட்டிலும் பரதனுக்கு வேறு உயிர் இல்லையாகையால் உயிரை விட்டுவிட்டு உடல் மட்டும் சென்றது போல பரதன் கேகய நாட்டிற்குச் சென்றான் என்று பொருவாகும்.

10. நகர் நீங்கு படலத்தில் கைகேயியினுடைய ஆணையைப் பெற்றுக்கொண்டு காட்டுக்குச் செல்லும் இராமன் கௌஸல்யையின் வீட்டிற்குச்சென்று அவளைக்கண்டு வணங்கினவுடன் இராமன் வந்த நிலைமையைப் பார்த்து அவள்

*   *   *   *   குழைந்து வாழ்த்தி
நினைந்ததென் னிடை யூறுண்டோ நெடுமுடி புனைதற் கென்றாள்

இதற்கு இராமன் பின் வருமாறுரைக்கலானான்.

மங்கை யம்மொழி கூறலும் மானவன்
செங்கை கூப்பிநின் காதற் றிருமகன்
பங்க மில்குணத் தெம்பி பரதனே
துங்க மாமுடி சூடுகின் றானென்றான்.

முறைமை யன்றென்ப தொன்றுண்டு மும்மையின்
நிறைகு ணத்தவ னின்னினு நல்லனால்
குறைவி லன்னெனக் கூறின நால்வர்க்கும்
மறுவி லன்பினில் வேற்றுமை மாற்றினாள்.

(இன்னும் வரும்)

பி. எஸ். சுப்பிரமணிய ஐயர்.

302

சுமதியென்னும் உத்தமியின் சரித்திரம்.

(184-ம் பக்கத்தொடர்ச்சி.)

அப்பெரியோர்கள் கேட்ட பாஷையிலேயே சுமதி அவர்களுக்கு மறுமொழிகூறினமையால் அவர்கள் அவளிடம் அநுதாபங்கொண்டு "அம்மா! நீ பேசுகிற வினயமும் காம்பீர்யமும் எங்களுக்கு மிக்க மகிழ்ச்சியைத் தருகின்றன. கல்யாணத்தைப்பற்றிப் பேசினையே நீ கன்னிகையா? உனக்கு வயதாயிற்றே. இன்னும் கல்யாணம் ஆகவில்லையா? உன் தலைவன் யார்? இராஜபுதனம் உன்னிருப்பிடம் என்றாயே, நாங்களும் இராஜபுதனத்தைச் சேர்ந்தவர்களே. உன் தாய் தகப்பன் எவர்? ஊர் எது? சங்கோசமில்லாமல் தாராளமாய்ச் சொல்லு. உன் வார்த்தைகளின் காம்பீர்யத்தால் நீ உயர்குலப்பெண்ணாகத் தெரிகிறது. நாங்கள் உனக்குப் பிதாஸ்தானம் என்று எண்ணி எல்லாவற்றையும் தாராளமாகச் சொல். சிறிதும் பயப்படவேண்டாம்" என்று கூறவே, சுமதி அவர்களது பேச்சின் மிருதுத்வத்தையும் உள்ளன்பையும் நோக்கித் தைரியங்கொண்டு மறுமொழிகூறத் தொடங்குமுன்னரே தன்னை யறியாது விம்மி விம்மி யழத்தொடங்கினாள். அப்பெரியோர்கள் "அம்மா! நீ சிறிதும் பயப்படவேண்டாம் உனக்கு இனிக்கவலையேன்? நீ யாராக இருந்தாலும் உன்னை எங்கள் குழந்தையைப்போல் பாதுகாப்போம். சந்தேகம் வேண்டாம். தைரியமாக என்னசொல்ல நினைத்தாயோ அதனைச் சொல்லு. உன் பிதாவினிடம் நீ எவ்வாறு மனஸ்கூசாமல் எதையும் சொல்வாயோ அவ்விதமே சொல் அம்மா" என்று தைரியங்கூறவே சுமதி பின்புறம் நோக்கித் திடுக்கிட்டு "அப்பாதகன் சூரிய உதயத்துக்குமுன் என்னைத்தேடி வந்தாலும் வருவான். நான் எல்லாவற்றையும் விஸ்தாரமாகப் பின்னர் தெரியப்படுத்துவேன். இப்பொழுது என்னைத் தொடர்ந்து அப்பாதகன் ஓடிவந்தாலும் காணவண்ணம் எங்கேயாவது ஒளித்துவையுங்கள்" என்று விம்மியகுரலுடனே சொல்லவே உடனே அவர்களும் "இப்பேதை தனக்கு நேரிடக்கூடிய ஆபத்தினின்றும் தப்பிக்க எண்ணுவது மிகவும் உத்தமம். இவ்வநாதையை இச்சங்கடத்தில் காப்பாற்ற வேண்டுவது நம்கடமை" என்று சிந்தித்து உடனே தங்களுடைய நடுவண்டிகளில் ஒன்றை நிறுத்தித் தங்கள் ஸ்திரீகளிடம் அவளைச்

சேர்ந்ததுமன்றி ஒருவரும் யாதொன்றும் பேசாமலிருங்கள். இப்பெண் நம்மைச்சேர்ந்தவள். இதோ நான்குமைல்தூரத்தில் தெரிகிற ஊருக்குப்போகிறவரை இந்த வண்டியில் மனிதர்கள் இருப்பதாகவே ஒருவரும் நினையாவண்ணம் சிறிதும் சப்தமின்றிச் செல்லுங்கள். ஊர்போய் எல்லா விவரங்களும் தெரிந்துகொள்ளலாம் என்று அவ்வண்டியிலிருந்த ஒரு மூதாட்டியினிடம் சொல்லித திட்டம் செய்துவிட்டு அவ்வண்டிக்கும் அடுத்தடுத்துச் சென்ற இரண்டு மூன்று வண்டிகளுக்கும் இருபுறமும் படுதாக்களைப்போட்டு மறைத்தார்கள். அவ்வண்டிகளிலெல்லாம் இவர்களைச் சேர்ந்த ஸ்திரீகளே இருந்தார்கள். ஆகையாலும் சூரியோதய சமயமாயிருந்ததாலும் மற்ற வண்டியிலுள்ள பெண்பிள்ளைகளும் வழக்கம்போல் நிரைபோடுவதாக நினைத்துச் சும்மாயிருந்து விட்டாகள். அப்பெரியோரிருவரும் கடைசிவண்டிக்குப் பின்தொடர்ந்து சென்றார்கள். இவ்வாறு ஏற்பாடுகள் செய்தது ஒரேவண்டியிலுள்ள பெண்பிள்ளைகளுக்குமட்டும் தெரியுமே ஒழிய வேறெவர்க்கும் தெரியாது. விடிந்துவிட்டபடியால் வண்டிகளும் வேகமாகப் போகத் தொடங்கின.

இச்சமயம் சூரியன் உதிக்க ஒரு நாழிகைப்பொழுது இருக்கும். நல்ல வெளிச்சமுண்டாகி விட்டது. இவர்களுக்குப்பின் அரைமைல் தூரத்தில் ஒரு பெருங்கூட்டத்தார் தடியும் கையுமாக வண்டிகளை நோக்கி வந்துகொண்டிருந்தார்கள். அக்கூட்டத்தில் ஏறக்குறைய இருபது பேர்களிருக்கலாம். அவர்கள் குடல்தெறிக்க ஓடிவந்துகொண்டிருப்பதைக் கண்ணுற்ற அப்பெரியோர்கள் "ஓகோ! மோசம் வந்துவிட்டது. கள்ளர் கூட்டத்தார் எங்கேயோ கொள்ளையடித்துவிட்டுத் திரும்புகிறமாதிரியாகத் தோற்றுகிறது. ஒருகால் இவ்வண்டிகளையும் தாக்கினாலும் தாக்குவார்கள். தெய்வாதீனமாய் நன்றாக வெளிச்சமாகிவிட்டது. ஆகையால் அவர்கள் அக்காரியத்துக்குத் துணியார்கள். எல்லாவற்றிற்கும் நாம் ஜாக்கிரதையாக இருப்போமென்று வண்டியிலுள்ளவர்களை எச்சரித்துவிட்டு தூங்குகிற வண்டிக்காரர்களையும் எழுப்பிவிட்டார்கள். சிறிதுநேரத்துக்கெல்லாம் அக்கூட்டத்தார் அவ்வண்டிகளையணுகி அவைகளின் பின்புறம் செல்லுகிற பெரியோர்களைப் பார்த்து "ஐயன்மீர்! இங்கு யாராவது ஒரு சிறு பெண்பிள்ளை போகக் கண்டீர்களா? அவள்

எங்கள் யஜமானன் உத்தரவின்றித் தப்பி வந்துவிட்டாள்" என்று கூறவே "சிறுபெண் இத்தனை தூரம் துணிகரமாய் இருட்டில் வந்திருக்கமாட்டாள். இங்கு ஒருவரும் வரவில்லை. ஒருகால் வேறு பாதைகளில் சென்றிருக்கலாம்" என்றார்கள். இதனை வாசிப்பவர்களிற் சிலர், தெய்வபக்தியுடன்கூடிய பெரியோர்கள் பொய் சொல்லலாமா? அது பாபமாகாதோ என்று ஒரு கேள்வி கேட்பார்கள்.

"பொய்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கு மெனின்."

என்று நாயனர் கூறியபடி பிறர்க்கு நன்மையைச் செய்வதாக இருந்தால் பொய்ம்மைச் சொற்களும் உண்மைச்சொற்களாம். துஷ்டர்களிடத்தில் நடந்ததை மறைத்துச் சொல்வதால் சிஷ்டர்கள் காப்பாற்றப்படுவார்களானல் அச்சொற்கள் பாபமாகா. நியாயசபை முன்னரும் பெரியோர்களிடமும் உண்மை வெளியாக வினவப்படும்பொழுது மறைத்துச்சொன்னல் பாபமே. அவ்வாறு இவ்விடத்தில் பெரியோர்கள் மறைத்துச்சொன்னதால் அநேகம் பாபச்செயல்கள் தடுக்கப்பட்டன. ஆகையால் இது பொய்யின் வகுப்பிற் சேராது. பயனைக்கருதுவது முக்கியம். அதனல் பிறர்க்குக் கேடும் லோகத்துக்குக்கேடும் உண்டாதல்கூடாது. எல்லோருக்கும் நன்மைபயக்குமெனின் பொய் பொய்யாகாது. சில சமயம் மெய்யானது பொய்விளைவிக்கக்கூடிய பாபத்தை உண்டாக்கும். ஸ்ரீ மகாபாரதத்தில் வனபருவத்தில் இதற்கு ஒரு திருஷ்டாந்தமும் கூறப்பட்டிருக்கின்றது. குளிர்ந்த சொல் தீமை பயப்பதுவும் சுடுசொல் நன்மை பயப்பதுவும் எவரும் அறிவார்கள். ஆகையால் சொல்லின் பயன் முக்கியமே ஒழிய சொல்மட்டிலும் பார்ப்பதிற் பயனில்லை.

பெரியோர்கள் பேச்சைக்கேட்ட அக்கூட்டத்தார்கள் இனி நடந்து செல்வதிற் பயனில்லை யென்று ஊரைநோக்கித் திரும்பி விட்டார்கள். வண்டிகளும் உதித்து இரண்டு நாழிகைக்குள் குறிப்பிட்ட கிராமம் போய்ச்சேர்ந்தன. எல்லோரும் அவ்வூரிலுள்ள ஒரு சத்திரத்தில் போய் இறங்கி அன்று பகல்வரை அவ்விடம் தங்கினர்கள். (இன்னும் வரும்)

எஸ். ஸ்வாமிநாதையர்.

சமாசாரம்.

மாதுஸ்ரீ அந்நிபெஸண்டு அம்மையார் வருகை.

சென்றமீ 23௳ பகல் 12 மணிக்கு அந்நிபெஸண்டு அம்மையார் காசியிலிருந்து சென்னப்பட்டணம் ஸெண்ட்ரல் ஸ்டேஷனில் வந்திறங்கினர். மோட்டார் வண்டியில் ஆதியாற்று பிரஹ்மக்ஞாந ஆச்ரமத்திற்குப் போனார்கள். அம்மையினுடைய வரவை எதிர்பார்த்துக்கொண்டிருந்த சென்னையிலுள்ள அநேக கநவான்களும் சபையைச் சேர்ந்த அநேகரும் கூடியிருந்தார்கள். ரோஜா ஜரிகை ஹாரங்கள் அம்மையாருக்குப் போடப்பட்டன. ஸபையின் அழகிய விஸ்தாரமான உபர்யாஸம் செய்யும் மண்டபத்தில் சபையைச் சேர்ந்த அங்கத்தினர்கள் ஏராளமாய்க் கூடியிருந்தார்கள். கிழவரான டாக்டர் இங்கிலீஷ் என்பார் அம்மையாரை உத்தேசித்து ஒரு நல்வரவுப் பத்திரிகையைப் படித்தார். பால் ஒழுகும் முகத்தினராகிய அம்மையார் புன்சிரிப்புடனே நல்வரவுப் பத்திரிகையை மிகவும் அன்புடன் அங்கீகாரம் செய்து அடியில் வருமாறு வசனித்தனர்:—

"என் அன்பிற்குரிய ஸ்நேஹிதர்களே தாங்கள் பிரியத்துடன் வாசித்த நல்வரவுப் பத்திரிகையை மிகவும் ஸந்தோஷமாய்க் கேட்டேன். வந்தனமளிக்கின்றேன். மேல் நாட்டில் பிரஹ்மக்ஞாந ஸபையானது மென்மேலும் அபிவிருத்தியாகிக்கொண்டு வருகிறது. அநேக பிரதாந நகரங்களில் அதன் ஆலயங்கள் ஏராளமான திரவியச் செலவின்மேல் உத்ஸாஹத்துடன் கட்டப்பட்டு வருகின்றன. ஸபையைப்பற்றியும் என்னைப்பற்றியும் பத்திரிகை வாயிலாக வரும் நிந்தனைகளைக் கவனியாதிருங்கள். அவைகளைப் பற்றிப் பொறுமை பாராட்டுமின், சாந்தமாயிருமின், ஸந்துஷ்டி பெறுமின். மநச் சஞ்சலம் தவிர்மின். என்போல் நீவிரும் மநச்சமாதாநம் கொள்மின். பிறர் செய்யும் ஸங்கடங்களும் இடையூறுகளும் சொற்பகாலந்தான் நிகழும். உலகம் நலம் பெறும்படி நடைபெறும் இச்சபை என்றும் வாழுமென்று அறிமின்."

பின்பு அன்று சாயங்காலம் $5\frac{1}{2}$-க்கு விக்டோரியா ஹால் என்ற உபந்யாஸ மண்டபத்தில் சென்னையிலுள்ள வர்த்தகர்கள், உத்தியோகஸ்தர்கள், வக்கீல்மார், மாணவர்கள், ஏராளமாய்க் கூடினார்கள். கவர்நருடைய சட்டநிரூபண சபையில் சென்னை முனிஸிபாலிட்டியின் பிரதிநிதியாகிய கநந்தங்கிய ஸ்ரீமாந் தியாகராஜ

செட்டியாரவர்கள் அக்ராஸநம் வகித்தனர். அம்மையார் ஸபாமண்டபத்தில் நுழையவே மண்டபத்திலிருந்த அனைவரும் அம்மைக்கு மரியாதை பண்ணுமாறு எழுந்தனர். பின்பு ஸபாநாயகர் அடியிற்கண்ட விஷயங்களடங்கிய ஒரு நல்வரவுப் பத்திரிகை ஆங்கிலத்திலுள்ளதை வாசித்தனர்:—

"அன்பார்ந்த அம்மை! ஐரோப்பாவுக்குப் போய்த் திரும்பித் தாங்கள் இந்நகருக்கு வருகையைப் பிரியத்துடன் ஏற்று ஸந்தோஷிக்கிறோம். இந்தியா தேசத்து நிலத்தில் தாங்கள் அடிவைத்தது முதலும், அத்தேசத்தைத் தங்களுடைய சொந்த தேசமாக உரிமை கொண்டாட ஆரம்பித்தது முதலும் இந்தியா தேசத்திற்கும் அதன் ஜனங்களுக்கும் தளராத அன்புடனும் விசுவாஸத்துடனும் வேலைசெய்து கொண்டு வருகிறீர்கள். அந்ய தேசத்தில் ஜீவநம் செய்வதற்காகப் போயிருக்கின்ற இந்தியர்களின்மேல் சில ஆதரவான வார்த்தைகள் உற்ற சமயத்தில் தாங்கள் வசனித்திருக்கின்றவை இந்தியர்கள் பால் தாங்கள் வைத்திருக்கும் பிரியத்தைத் தெளிவாய்க் காட்டுகிறது. எப்போதும் இந்தியர்களுக்கு அவர்கள் பூர்வீகர்களை பக்தி சிரத்தையுடன் பாராட்ட வேண்டுமென்று பன்முறை அவர்களுக்கு வற்புறுத்தி வருகிறீர்கள். முன்னோர்களின் உயர்நலமமைந்த லக்ஷ்யங்களைக் கவனித்து அவைகளின்படி இந்தியர்கள் நடக்கவேண்டுமென்று அடிக்கடி உபந்யஸித்து மிருக்கிறீர்கள். காசி க்ஷேத்ரத்தில் ஹிந்துக்களுக்காக உயர்ந்த ஒரு கல்லூரியை ஸ்தாபித்ததின் மூலமாய் இந்தியர்களின் கல்விப் பயிற்சியில் ஊக்கத்துடன் கைங்கர்யம் செய்தும் வந்திருக்கிறீர்கள். மேலும் ஹிந்து ஸர்வ கலாசாலை யொன்றை ஏற்பாடு செய்கின்ற முறையில் தாங்கள் இப்போதும் உழைத்துக்கொண்டு வருகின்றீர்கள். அதற்காக நாங்களும் எங்கள் ஸந்ததியாரும் என்றென்றும் நன்றி பாராட்டக் கடவோம். உலகத்திலுள்ள எல்லா மதங்களும் பொறுமையாயும் ஒற்றுமையுடனும் வாழ வேண்டுமென்றும், இந்தியர்களுக்கு அடிக்கடி ஹிதகரமான உபதேசத்தைச் செய்து வந்திருக்கிறீர்கள். தாங்கள் எத்தனையோ நற்காரியங்கள் இந்தியா தேசத்திற்குச் செய்திருக்கிறீர்கள். அவைகளைப் பற்றி இங்கு நாங்கள் சொல்லவேண்டுவதில்லை. தங்களுடைய நீடிய வாழ்வும், தாங்கள் செய்யும் கைங்கர்யத்தின் மேன்மையும் மென்மேலும் அபிவிருத்தியாக வேண்டுமென்பது எங்கள் பிரார்த்தனை."

மேற்கண்ட நல்வரவுப்பத்திரிகையை அழகான சித்திரவேலைஅமர்ந்த வெள்ளிப்பெட்டியில் வைத்து, அப்பெட்டியை அம்மையார்கையில் அக்கிராசநாதிபதி அவர்கள் கொடுத்தார்கள்.

அதன்மேல் மிகவும் உத்ஸாஹத்துடனே பின் வருமாறு அம்மையார் மறுமொழியாக வசனித்தனர்:—

தங்களுடைய நல்வரவுப் பத்திரிகைக்கு நான் மிகவும் வந்தனம் செய்கிறேன். இவ்வளவு பெயர்கள் எனக்கு மர்யாதைசெய்ய திரண்டு இருக்கிறீர்கள். இந்தியா தேசத்திற்கு நான் கைங்கர்யம் செய்ததையும், அது விஷயமாய் நான் முயற்சித்ததையும், நீங்கள் அங்கீகரிக்கிறீர்களென நான் மதிக்கிறேன். இந்தியாவினுடைய ஹிருதயமும் இங்கிலாண்டினுடைய ஹிருதயமும் இரண்டும்ஒன்றுபடவும் பெருமைதங்கிய இரண்டு தேசத்தார்களும் ஒருவர் மற்றவரைமதித்து, ஒருவர் மற்றவர்மேல் நன்னம்பிக்கை கொண்டு அதனால் இருவரும் ஐகமத்யமுள்ளவராய் ஆகவேண்டுமென்று நான் முயற்சிசெய்துகொண்டுவரும்படியான பாக்யம் பெற்றிருக்கிறேன். இதைவிட மேலானபுருஷார்த்தம் வேறிருப்பதாக நான் நினைக்கவில்லை. நான் பல சமயங்களிலும் உங்களுடைய பூர்வீக காலத்தின் உயர்வைப் பற்றியும், உங்களுடைய முன்னோர்களின் உயர்ந்த இலக்கியத்தைப் பற்றியும், உங்கள் தேசத்துகம்பீரமான நீர்களைப் பற்றியும், மஹாத்மாக்களைப் பற்றியும் உங்கள் மனங்களில் நல்ல சிந்தனை உண்டாகும்படியாக அடிக்கடி வசனித்திருக்கிறேன். எதற்காக என்றால், இந்தியா தேசம் இனிமேல் உயர்வான பதவிக்கு வரப்போகின்றது. அப்படி வருதற்குக்கு நீங்கள் உங்களுடைய பூர்வீகர்கள் மேல் நன்னம்பிக்கையும் கௌரவமும் பாராட்ட வேண்டுதல் இன்றியமையாததா யிருக்கின்றது. ஒருவன் ஸ்வதேசாபிமானியா யிருக்கவேண்டுமாகில், தன் தேசத்தைப்பற்றி கௌரவம் பாராட்டவேண்டும். தன்தேசத்தில் முன்னிருந்த பெரியோரைப் போற்றுதல் வேண்டும், அப்படி யின்றேல் அவன் ஸ்வதேசாபிமானியாகான். அதனால் அவன் தேசத்திற்கு நலம் செய்ய முடியாது. சென்ற காலத்தைப்பற்றியும், சென்ற காலத்திலிருந்த மஹாத்மாக்களைப் பற்றியும் சிந்தனை கொள்ளற்க என்றும் சிலர் உபதேசிப்பார்கள். அவ்வுபதேசம் சரியல்ல. ஒவ்வொரு தேசத்திற்கும் சில இயற்கையான நற்குணங்களும் ஸம்பத்துக்களும் உள்ளன. அவ்விதமே இந்தியா தேசத்திற்கு உரித்தான ஞான ஸம்பத் முதலியவை சில உண்டு. அவை மற்ற தேசங்களுக் கவ்வளவு கிடையா. இந்தியா தேசத்தில் பல மதங்களிருக்கின்றன. ஹிந்துமத மென்ன, பார்ஸிமத மென்ன, முகம்மதிய மதமென்ன, கிறிஸ்துமத மென்ன; இம்மதஸ்தர்கள் ஒருவரை யொருவர் நேசித்து வாழ வேண்டும். அப்படி வாழ்ந்தால்தான் தேசம் நலம் பெறும். மத வேற்றுமையால் ஏற்படும் த்வேஷம் குன்றவேண்டும். மதத்வேஷத்தால் வீண் சண்டை உண்டாகின்றது. உண்மையில் எல்லா மதங்களின் தத்வ விஷயங்களும் ஒரே மாதிரியாக இருக்கின்றன. ஆகையால் ஒரு

மதஸ்தர் மற்ற மதஸ்தர் பால் பொறுமை கொள்ளுதல் நலமன்று. உங்கள் தேசம் நலம்பெறும்படியாக உங்கள் தேசத்தினின்றே ஒருவர் வெளிவந்து தலைமை வகித்து உங்களை நல்வழியில் நடத்தவேண்டும். ஒரு ஜாதியார் மேன்மைபெறவேண்டுமானால் அந்தஜாதியிற் பிறந்தாரே மேன்மைப்படுத்த முடியுமேயன்றி பிறரால்முடியாது. இனி உங்கள் இனத்தாரேமுன்வந்து உங்களை நடத்தவே, என் போலியர்களுடைய வேலை வரவரக்குறையும். அத்தன்மையான நற்காலம்வரும்வரை தாய்பூமியான இந்தியாவுக்கு நான்செய்யக்கூடிய கைங்கர்யத்தை நான் செய்யட்டும். இவ்விதம் நான் நற்காரியம் செய்து கொண்டுவர, அதன் பயனாய் மறு ஜந்மத்தில் இந்தியா தேசத்திலேயே சரீரம் எடுக்கும்படியான ஒரு அதிருஷ்டத்தைப் பெறுவேன. இப்போது மநத்தால் இந்தியரில் ஒருவராக இருக்கிறேன். மறு ஜந்மத்தில் சரீரத்தாலும் இந்தியர்களில் ஒருவராக ஆவேன் என்று எதிர் பார்க்கிறேன். முன்னொரு காலத்தில் நான் இந்தியர்களில் ஒருவராகப் பிறந்து நடை பெற்றேன். இனி, அவ்விதமாவேன் என்ற நம்பிக்கையுடையவளா யிருக்கிறேன்."

பின்பு கூட்டம் கலைந்தது.

ஷை 25-ம்வ ஸ்ரீமாந் லேட்பீடர் என்பார் ஐரோப்பாக் கண்டமெல்லாம் யாத்திரை செய்து, இப்பொழுது நம் தேசத்திற்குத் திரும்பியிருக்கிறார். அன்று சாயங்காலம் சென்னை ராஜதானியிலுள்ள பல பிரஹ்மக்ஞாந சபையின் கூட்டத்தார், ஆதியாற்று பிரஹ்மக்ஞாந சபையின் உபந்யாஸ மண்டபத்தில் மாதுஸ்ரீ பெஸண்டு அம்மையாருக்கும் ஸ்ரீமான் லேட்பீடர் அவர்களுக்கும் நல்வரவுப் பத்திரிகைகளைப் படித்தார்கள். அவருக்கும் மாதுஸ்ரீ அந்நிபெஸண்டு அம்மையாருக்கும் ஜரிகை ஹாரங்கள் போடப்பட்டன. இருவரும் இனிமையாக மறுமொழி செய்தனர். இருவர்களுடையவும் நல்வரவை யேற்பதற்கு பல பட்டணங்களிலிருந்தும் ஊர்களிலிருந்தும் அநேகர் வந்திருந்தார்கள். ஷையார்களுடைய நல்வரவை யேற்பதின் ஸம்பந்தமான எல்லாக் காரியங்களும் நேர்மையாய் நடைபெற்றன.

சென்றமீ 30உ சென்னை ராஜதானி புது கவர்னர் பெண்ட்லண்ட் பிரபு அவர்கள் சென்னை நகர் வந்து சேர்ந்தார்கள். அன்று திநமே கவர்னர் உத்யோகத்தை வகித்தார். பழைய கவர்னராகிய கநந்தக்கிய ஸர் ஹாமிக் அவர்கள் (Sir Hammik) சென்னை ராஜதானியை விட்டு ரயில் மூலமாய் இங்கிலாண்டுக்குப் பிரயாணமாயினர்கள்.

இத்தாலியா தேசத்திற்கும், துர்க்கி தேசத்திற்கும் ட்ரிப்போலி (Tripoli) என்ற நாடு விஷயமாக நடந்து வந்த சண்டை ஒய்ந்துபோய் இரண்டு தேசத்திற்கும் ஸமாதான உடன்படிக்கை சென்றமீ த்தில் ஏற்படுத் தப்பட்டிருப்பதைப்பற்றிக் கேள்வியுற்று ஸந்தோஷமடைகின்றோம்.

துர்க்கி தேசத்திற்கும் அதற்குச் சுற்றியுமுள்ள சிறு நாடுகளான புல்கேரியா (Bulgaria), ஸெர்வியா (Servia), மாண்டி நீகிரோ (Monti Negro), கிரீஸ் (Greece), நாடுகளுக்கும் மும்மரமாய் யுத்தம் நடைபெறுகின்றது. பல இடங்களில் சண்டைகளும்; முற்றுகைகளும் சுமார் ஒரு மாதமாய்ப் போடப்பட்டிருக்கின்றன. ஆயிரக்கணக்கான ஜனங்கள் இச்சண்டையில் இருதிறத்திலும் யுத்தகளத்தில் கொலையுண்டு கிடக்கிறார்கள். துர்க்கி இராஜ்யம் பெரிய ஆபத்துக்குட்பட்டிருக்கிறதென்று நினைக்க வியஸநமாகிறது. ஸமாதானக்கோரிக்கை ஆரம்பித்ததாகத் தோன்றவில்லை.

பத்திராதிபர்.

புத்தக வரவு

விவாஹகால விமர்சம்:—இத்தப்புஸ்தகம் மைலாப்பூர் ஸம்ஸ்கிருத வித்யாசாலை தர்மசாஸ்திர பண்டிதர் ஸ்ரீநிவாஸ சாஸ்திரிகள் அவர்களால் ஸம்ஸ்க்ருத பாஷையில் சென்னைப்பட்டணத்திலிருக்கும் ஹிந்து விவாஹ சீர்திருத்த சபையாரின் வேண்டுகோளின்மேல் பிராஹ்மண ஸ்திரீகளின் விவாஹகாலம் நிர்ணயம் செய்யப்பெற்று எழுதப்பட்டுள்ளது. இரண்டு மூன்று ஷங்களுக்கு முன்னர் திருவல்லிக்கேணியிலிருக்கும் மகா-ா-ா-ஸ்ரீ வி. ஸ்ரீநிவாஸ சாஸ்திரிகளவர்கள் (of Servants of India Society) பிராஹ்மண ஸ்திரீகளின் விவாஹம் ருதுவானதின்மேல் செய்தல் சாஸ்திர விரோதமல்ல என்று ஆங்கிலத்தில் விரிவான ஒரு புஸ்தகம் எழுதியுள்ளார். அது தமிழில் மொழி பெயர்க்கப்பட்டு நம் நாட்டில் பரவியிருக்கிறது. அந்தப் புத்தகத்தின் அபிப்பிராயத்துக்குக் கண்டனமாகக் கும்பகோணத்திலிருந்த காலஞ்சென்ற மஹா மஹோபாத்யாய கணபதி சாஸ்திரிகள் அவர்களால் ஸம்ஸ்கிருதத்தில் "வயோ நிர்ணயம்" என்ற பெயரால் ஒரு புஸ்தகம் எழுதப்பட்டு வெளிவந்தது. முன்பு திருவல்லிக்கேணி வி. ஸ்ரீநிவாஸ சாஸ்திரிகளால் செய்யப்பட்ட புஸ்தகத்தையும், பின்பு, கணபதிசாஸ்திரிகளவர்கள் எழுதியுள்ள புஸ்தகத்தையும் நன்றாய்ப் பரிசீலனைசெய்தும் அவ்விரண்டு புஸ்தகங்களிலும் உள்ள பிரமாண வாக்கியங்களை ஆராய்ந்தும், அவைகளில் சொல்லாத பின்னும் மற்ற பிரமாணங்களையும் கவனித்தும் பிரகிருத புஸ்த

கமானது மைலாப்பூரிலிருக்கும் ஸம்ஸ்க்ருத வித்யாசாலை பண்டிதர் ஸ்ரீநிவாஸசாஸ்திரிகளவர்கள் ஸம்ஸ்க்ருதத்தில் எழுதி வெளியிட்டிருக்கிறார்கள். இப்புஸ்தகத்தை பிரஸிடென்ஸி காலேஜ் ஸம்ஸ்க்ருத புரொபஸர் மகா-ர-ர-ஸ்ரீ குப்புஸாமி சாஸ்திரிகள் M. A. அவர்களும் மைலாப்பூர் காலேஜ் பிரதம உபாத்யாயர் மஹா மஹோபாத்யாய சந்திரசேகரசாஸ்திரிகளும், நன்றாய்ப் படித்து புஸ்தகத்தின் நிர்மானங்கள் சாஸ்த்ரீயமானவை என்று சொல்லியிருக்கிறார்கள். இப் புஸ்தகத்தில் ஆதியில் ஸ்ரீநிவாஸ சாஸ்திரிகளால் செய்யப்பட்டிருக்கின்ற நூலின் அபிப்பிராயங்கள் பொதுவாய் சரியானவைகளென்றும் மஹா மஹோபாத்யாய கணபதி சாஸ்திரிகளவர்களால் செய்யப்பட்ட வயோநிர்ணய கிரந்தத்தில், வேதசாஸ்திர பிரமாணங்களை விபரீதமாக அர்த்தம் செய்திருக்கின்றார்களென்றும் விவாஹ மந்த்ரங்களின் அர்த்தங்களை (லிங்கங்களை) ஆதாரமாக வைத்துக்கொண்டு நிர்மானம் செய்யும்பக்ஷத்தில் ருதுவானதின் மேல் விவாஹம் செய்தல்தான் சாஸ்த்ரீயமென்றும், ஸ்மிருதிகளில் அநேக இடங்களில் ருதுவாகிறதற்குமுன் விவாஹம் செய்யவேண்டுமென்றும், சிலவிடங்களில் ருதுவானதின் மேலும் விவாஹம் செய்யலாமென்றும், விவாஹத்தின் முக்கியமான கருத்து ஸரியான புருஷனை ஏற்படுத்திக்கொள்ளுதல் என்றும் சொல்லியிருப்பதை யோசிக்கும் விஷயத்தில் ருதுவானமேல் 3வரு'வரை ஸ்திரீகளுக்கு விவாஹம்செய்யலாமென்றும், அம்மூன்று வருஷத்திற்குள் பிதா அல்லது ரக்ஷகர் விவாஹம் செய்விக்காமலிருந்தால் அந்தப் பெண்ணே தானே ஸ்வயம்வரம் தேடிச் செய்துகொள்ளலாம் என்றும் இக்காலத்திலும் ருதுவானமேல் விவாஹம் செய்தல் சாஸ்திரீயம் என்றும் மிக விரிவாகப் பல ஆதாரங்களுடனே சாஸ்திரிகளவர்கள் இப் புஸ்தகத்தை வெளிப்படுத்தியுள்ளார். “தடியெடுத்தவ னெல்லாம் தண்டல்கார னென்” றாற்போல ஸம்ஸ்கிருத பாஷையில் அற்ப சொற்ப பரிச்யமுள்ளவர்கள் எல்லாரும் தாங்கள் தாங்கள் தான் ஸகல சாஸ்த்ர பாரங்கதர்களென்று ஏனையர்களை மயக்கிக்கொண்டிருக்கும்காலத்தில், சாஸ்திரங்களின் ஸித்தாந்தம் இதுவென்று வியக்தமாக வெளிப்படுத்தியிருக்கிற மகா-ர-ர-ஸ்ரீ ஸ்ரீநிவாஸ சாஸ்திரிகளவர்களுக்கு நாம் எல்லோரும் நன்றிசெலுத்தக் கடவோம். எல்லாரும் உண்மையைத் தெரிந்துகொள்ளும்படியாக, ஹிந்து விவாஹ சீர்திருத்த சபையார் இப்புஸ்தகத்தை, தமிழ் முதலிய தேசபாஷைகளில் மொழி பெயர்க்கும்படி செய்வித்து தேசபாஷைகளில் பிரஸித்தம் செய்வார்களாகில் மிகவும் நலமாக இருக்கும்.

பத்திராதிபர்.

311



COL. H. S. OLCOTT.

313

விகஸித்து, நாம் அநுபவிக்கும்படியாகவும் கர்மங்களுடைய பக்குவ காலம் வருங்காலத்தில் நேரிடும். அந்தந்த ஸம்ஸ்காரம் அந்தந்த விதமாகப் பரிணமிக்கிறது. அதாவது ஞாந ஸம்ஸ்காரம் ஸ்ம்ருதியாகவும், இச்சா ஸம்ஸ்காரம் இச்சையாகவும், கிரியா ஸம்ஸ்காரம் கிரியையாகவும் பரிணமிக்கின்றன.

10. தாஸாமநாதித்வம் சாஶிஷோ நித்யத்வாத் ॥

நான் என்றும் இருக்கவேண்டும் என்ற பிரியம் நித்தியமாதலின் முன் பிரஸ்தாபித்த வாஸனைகள் அநாதியானவை.

குறிப்பு:—அவ்வாஸனைகளுக்கு ஆரம்பம் இல்லை. "நான் இல்லாமல் போகக்கூடாது, எப்போதும் இருக்கவேண்டும்" என்ற எண்ணமானது ஒவ்வொரு பிராணியிடமும் இருக்கின்றது. இது சுபாவமாக உண்டாகிறது என்று சொல்ல இயலாது. பிறக்கும்பொழுதே மரணபயம், துக்கம், த்வேஷம், முதலான விர்த்திகள், நிமித்தம் ஏற்படும்போது வெளியாகின்றன. முன் அநுபவமிருந்து, அது ஸம்ஸ்கார ரூபமாக இருக்கின்றமையால் தான், நிமித்தம் ஏற்படும்போது அந்த ஸம்ஸ்கார ரூபமான விர்த்திகள் வெளியாகின்றன என்று அறியவேண்டும்.

சிலர் அபிப்பிராயத்தில் (சார்வாகர் மதத்தில்) மநத்தின் அளவு அது இயங்கும் சரீரத்தின் அளவைப் பொருத்ததாக இருக்கிறது என்பார்கள். தீபம் குடத்திலிருந்தால் குறுகியும், பெரிய வீட்டிலிருந்தால் பெருகியும் ஆதல்போல மநமும் சரீர ஆக்ருதியைப்பற்றியே குறுகியும் பெருகியும் ஆகின்றது என்று சொல்லுகிறார்கள். அது சரி அன்று. தீப ஜ்வாலை குறுகியும் பெருகியும் ஆகின்றதில்லை. தீபத்தின் பிரபை, (காந்தி) தீபம் இருக்கும் ஆவர்ணத்திற்குத் தக்கபடி ஸங்கோசம், விகாஸம் பெறுகிறது. அதுபோலவே மநத்தின் விர்த்திக்கு, நிமித்தம் உண்டாக, ஸங்கோசம் அல்லது விகாஸம் ஏற்படுகின்றதேயல்லாமல், மநத்திற்கன்று. அது ஒரே மாதிரியாகத்தான் இருக்கின்றது. நிமித்தம் பாஹ்யம், ஆந்தரம் என இருவகை. பஹிர்முகமான நிமித்தங்கள் என்பது வெளிச் சாதநங்கள். அவையாவன: ஸ்துதி, தாநம், நமஸ்காராதிகள். அந்தர்

முகமான நிமித்தம் சிரத்தை முதலியன. மைத்ரீ, கருணை, முதிதை, உபேக்ஷை முதலிய செய்கைகள் யோகியானவன் உலகத்தில் நடைபெறுங் காலத்தில் அவன் செய்யும் விளையாட்டுகளாம். இவைகள் வெளி நிமித்தங்களினால் உண்டாகின்றவையல்ல, அந்த யோகியின் மநத்தின் உயர் நலத்தால் ஏற்படுகின்றன.

மேற்படி இரண்டு நிமித்தங்களில் அந்தர் முகமான நிமித்தம் விசேஷ யோக்யதையை உடையது, அதிக உயர்வானது. ஞாநம் வைராக்யம் இவையிரண்டையும்விட மேலானது யாதுளது? சித்த பலமின்றி யாரால் தண்டகாவநத்தை அழிக்கக்கூடும்? சுக்ராசார்யர் ஒரு காலத்தில் தம் மநோ பலத்தால் தண்டகாவநத்தை யழித்ததாகப் புராணக்கதை. ஸமுத்ரத்தை அகஸ்தியரைப்போல் மநோ பலமுடையவர்களாலன்றி வேறு யாரால் பாநம் பண்ணக்கூடும்?

நான் என்பது இல்லாத காலத்தை நினைத்தல் கூடாமையால், நான் என்பது தொடர்பறாது எப்போது முள்ளது. அதனால் பூர்வ ஜந்மங்கள் இருந்திருக்கின்றனவென்று ஏற்படுகிறது. மநஸ் ஆனது எத்தன்மையதாக இருக்கிறதென்று விசாரணை ஏற்பட, அது மஹாஸூக்ஷ்மமாக ஆகாசம் போல் பரவி யிருக்கிறதுஎன்று சித்தாந்தப்படுத்தப்பட்டிருக்கிறது.

11. ഹേതുഫലാശ്രയാലംബനൈഃ
സംഗൃഹീതത്വാദേഷാമഭാവേ തദഭാവഃ॥

ஹேது, பலம், ஆசிரயம், விஷயம் என்றவைகள் மநத்தின்கண் வாஸனைகள் தங்கும்படி செய்கின்றன. அவைகள் போய்த்துப்போனால் வாஸனைகளும் போம்.

குறிப்பு:—ஹேது: தர்மத்தினால் சுகமும், அதர்மத்தால் துக்கமும் உண்டாகும். ஸுகம் ஆசைக்குக் காரணம், துக்கம் த்வேஷத்திற்குக் காரணம். இவைகளால் முயற்சி உண்டாகிறது. இம்முயற்சி மநம், மெய், மொழிகளால் வெளிப்பட்டு ஒருவனுக்கு நன்மையையும், மற்றவனுக்குத் தீமையையும் செய்கிறது. இச்செய்கைகளால் தர்மம், அதர்மம், அவைகளால் சுகம், துக்கம், அவைகளால் ஆசை, துவேஷம் மறுபடியும் உண்டாகின்றன. இவ்விதமாக ஸம்ஸாரம் மேற்கண்ட ஆறு ஆரைக்கால்கள் உள்ள, என்றும் சுழலுகிற சக்ரம்

போன்றதாம். இச்சக்கரத்தைச் சுழலச் செய்கிறது அவித்தை. இதுவே கிலேசங்களுக்கு மூலம். இது தான் ஹேது.

பலம்:—ஜாதி (பிறப்பு), ஆயுஸ், போகங்கள் இவை அபூர்வம், பின் விளைகின்றவை.

ஆசிரயம்:—எல்லாச் செயல்களுக்கும் மநஸ் தான் காரணம். எல்லா வாஸனைகளும் அதில் இருக்கின்றன. சாந்தி, தாந்திகளால் மநத்தூய்மை பெற்ற யோகியை சுகதுக்கங்கள் பற்றுவாம். அதனால் சுக துக்கங்கள் அவன் மநத்தைத் தாக்காவாம். சுகதுக்கங்களுக்கு ஆசிரயம் போய்விடும்.

விஷயம்:—வெளியிலுள்ள விஷயங்கள், பற்றுதலை உண்டாக்கும். வெளியிலுள்ள பதார்த்தங்கள். இது ஆலம்பநம் எனப்படும்.

இவை நான்குந்தான் வாஸனைகளைத் தங்கும்படி செய்விக்கின்றன. இவை நான்கும் அற்றுப்போனால், இவைகளை ஆசிரயித்துத் தங்கும் வாஸனைகளும் அற்றுப்போம்.

12. அதீதாநாகதம் ஸ்வரூபதோ஽ஸ்த்யத்வபேதாத்தர்மா ணாம்॥

சென்றுபோன வஸ்துவும், வரப்போகும் வஸ்துவும் உண்மையில் எப்போதும் உள்ளவை. தர்மங்கள் நிகழும் நெறியில் பேதங்கள் இருப்பதால்வஸ்து இல்லாமை தோன்றுகிறது.

குறிப்பு:—இறந்தகாலம், வருங்காலம், நிகழ்காலம் இவை மூன்றும் குணங்கள் பரிணமிக்கின்ற கிரமத்தைக் குறிப்பிடுகின்றன. குணங்கள் வித்யாஸப்படுகின்றமையால் அவ்வேற்றுமையான பாவம் ஏற்படுகிறது. பரிணமங்கள் ஒரு பிரவாஹமாக நடைபெறுகின்றன. ஒரு குறிப்பிட்ட இலக்ஷ்யத்தை வைத்துக்கொண்டு நாம் பார்க்கிறதில் அதை நோக்கி முன்னதை வருங்காலமென்றும் பின்னதை இறந்தகாலமென்றும் இலக்ஷித்து அநுபவிக்கிறதை நிகழ்காலம் என்றும் சொல்லுகிறோம். காரியம் காரணத்திற்குள் இருக்கின்றமையால் சங்கோசமாக இருந்ததே பின் விகாஸம் பெறுகிறது. மொட்டு, மலர், காய், கனி போல என்றறிக. இறந்த காலம், நிகழ்காலம், வருங்காலமென்ற பரிணமபேதங்களாகிய மூன்று போங்வைகளை வஸ்துக்கள் தரிக்கின்றன. வஸ்து என்றுமுள்ளது

போர்வைகள் மாறுகின்றன. போர்வைகள் மாறி மாறி, குணங்கள் ஏற்படுகின்றன. (3-ம் பாதம், 13, 14-வது சூத்திரங்களைப் பார்க்க)*

13. தே வ்யக்தஸூக்ஷ்மா குணாத்மாந: ॥

அவைகள் (தர்மங்கள்) வியக்த மாகவும் ஸூக்ஷ்மமாகவும், குணங்களை ஸ்வரூபமாக உடையவைகளாகவும் இருக்கின்றன.

குறிப்பு:—இந்த திர்மங்கள் இறந்த காலத்திலும், வருங்காலத்திலும் ஸூக்ஷ்மமாகவும் நிகழ் காலத்தில் வியக்தமாகவும் இருக்கின்றன. குணங்கள் மூன்றும், காலம் மூன்றும் சூக்ஷ்மமானவைகள். ஸ்தாவர ஜங்கம ரூபமான எல்லா ஜகத்தும் குணங்களுடைய பரிணாம பேதமே. எல்லா வஸ்துக்களும் சுகம், துக்கம், மோஹங்களையுடைய குணங்களுடன் சேர்ந்திருக்கின்றமையாலும் குணங்களினின்று உண்டாயினமையாலும் வஸ்துக்கள் யாவும் குணஸ்வரூபங்கள் எனச் சொல்லப்படுகின்றன. உண்மையில் ஜகத்தானது குணங்கள் தான். அப்படியே ஹிரண்யகர்ப்பர் சொல்லுகிறார்:—"குணங்களின் வாஸ்தவமான ஸ்வரூபம் இந்த்ரியங்களின் வரம்புக்குள் வராது. எது இந்த்ரியங்களுக்குப் புலப்படுகிறதோ அது மாயை நாசத்தை உடையது. அது இல்லாமை போலவேயாம். இந்த்ர ஜாலம் செய்பவனால் உண்டாக்கப்படும் வஸ்துவைப் போல் பிரபஞ்சம் இருக்கிறது. ஒவ்வொரு க்ஷணமும் அது நாசத்தையடைகிறது."

"குணங்கள் மூன்றாகவும், அவைகளில் பரிணமிக்கின்ற வஸ்து ஒன்றாகவும் எப்படி ஏற்படும்?" என்ற ஆக்ஷேபத்திற்கு அடியில் வரும் ஸூத்ரம் ஸமாதானத்தைச் சொல்லுகிறது.

14. பரிணாமைகத்வாத் வஸ்துதத்த்வம் ॥

பரிணாமம் ஒன்றாயிருப்பின் வஸ்து ஒன்றேயாம்.

குறிப்பு:—மூன்று குணங்கள் ஒரு வஸ்துவில் இருக்கிறதில் ஒன்று முக்யமாகவும் மற்ற இரண்டும் அமுக்கியமாகவும் இருக்கின்றமையால் ஒரே பரிணாமம் ஏற்படுகிறது. ஸத்துவகுணம் முக்கிய

* கீதை 2-ம் அத்., 16-ம்சு., 7-ம் அத்., 26-ம் சுலோகங்கள் இங்கு கவனிக்கத்தக்கன.

317

மாகவும், ரஜஸ், தமஸ் அமுக்கியமாகவும் இருக்கும்போது ஞானேந்த்ரியங்களும்; ரஜஸ் மேலாகவும், மற்றவிரண்டும் கீழாகவும் இருக்கும்போது கர்மேந்த்ரியங்களும்; அவ்விதமே தமஸ் மேலாகவும், மற்றவை தாழ்ந்தும் இருக்கும்போது விஷயங்கள் (பதார்த்தங்கள்) உண்டாகின்றன.*

விக்ஞானவாதிகளின் ஸித்தாந்தம் என்னவென்றால், "வெளியில் பதார்த்தங்களே இல்லை. எல்லாம் ஸ்வப்நத்தில் போல ஞானத்தால் கல்பிதம். அதனால் குணங்கள் அல்லது பிரதானம் ப்ருதக்காக (வேருக) இருக்கின்றமைகிடையாது" என்பதேயாம். இது சரியன்று. ஸவப்நத்தில் அவனவனுக்குத் தனித்தனியாக வேறுவேருக வஸ்துக்கள் தோன்றுகின்றன. ஆனல், பிரபஞ்சத்தில், எல்லாக் காலத்திலும் எல்லாதேசங்களிலும், எல்லாருக்கும் ஒரே மாதிரியாகப் பதார்த்தங்கள் தோன்றுகின்றன. எல்லாராலும் ஒரே மாதிரியாக அநுபவிக்கப்படுகின்றன. அதனல் ஸவப்நாவஸ்தையைப் போல் விஷயம் இல்லை யென்பது சரியன்று.

15. வஸ்துஸாம்யே சித்தபேதாத்தயோர்விபக்த: பந்தா:॥

வஸ்து ஒன்றாய் இருப்பினும் (அதை கிரஹிக்கின்ற) மநஸ்கள் பேதப்படுகின்றமையால், (ஞாநம், அர்த்தம் என்ற) இரண்டினுடைய வழிகள் வேறாக ஏற்படுகின்றன.

குறிப்பு:—ஞாநம் வஸ்துவை உண்டுபண்ணுது. ஒரே வஸ்து பலருடைய ஞாநத்தால் உண்டாக்கப்படமாட்டாது. ஞாநபேதங்கள் இருக்கின்றமையால் ஒருவன் ஞாநத்தாலும் அது உண்டாக்கப்படுவதில்லை. பலர் ஒரே விதமாக வஸ்துவைப் பார்க்கின்றமையால் ஞாநம் அவ்வஸ்துவாகப் பரிணமிக்கிறதென்று கொண்டால், ஞாநம் சேதநம், பிரகாசமுள்ளது, ஸூக்ஷ்மமானது. விஷயம் (வஸ்து) ஜடம், கநம், இலேசு, பெரிது, சிறிது, குட்டை, நெட்டை இவ்வித பேதங்களுள்ளதாயு மிருக்கின்றது. ஞாநம் விஷயத்துக்குக் காரணமாயின் விஷயமாகிய கார்யம் எவ்விதமாகவாவது காரணமாகிய ஞாநத்தில் முன் இருக்கவேண்டும். அப்படி இல்லை. ஒரே வஸ்து வெளியில் ஸ்வயமாக ஞாநத்தை அபேக்ஷிக்காமல் இருக்கின்றது என்பது வஸ்துவையும் அதைப் பிரகாசிப்பிக்கின்ற விளக்கையும்

* பகவத்கீதை 14-ம் அத்., பார்க்க.

போன்றதாம். அப்படியானால் பலர் ஒரே வஸ்துவைப் பலவிதமாக கிரஹிக்கின்றார்களே என்றால் அவரவர்கள் பூர்வ ஸம்ஸ்கார விசேஷத்தினாலும், ஸத்வ, ரஜஸ், தமஸ், அவரவர்களின் மநத்தில் ஏற்றத் தாழ்ச்சியாக இருக்கின்றமையாலும் அவ்விதம் ஒரே வஸ்துவைப்பற்றி வேற்றுமை பாவங்கள் நிகழ்கின்றன. ஒருவன் ஒரு வஸ்துவைப் பிரியத்துடன் பார்க்கிறான், மற்றொருவன் வெறுப்புடன் பார்க்கிறான். வேறு ஒருவன் இரண்டுமின்றி மத்யஸ்தனாக இருந்துகொண்டு உதாஸீநனாகப் பார்க்கிறான். ஒரு சிறு திருஷ்டாந்தம்—ஒரே ஸ்திரீ ஒருவனுக்குப் பத்நீயாகவும், வேறு ஒருவனுக்குப் புத்திரீயாகவும், மற்றொருவனுக்குத் தாயாராகவும் இருக்கிறாள். அந்தப் பல புருஷர்களின் மநங்களில் பலவித பாவங்கள் உண்டாகின்றன. பத்நீயாகக் கொள்பவனுக்கு காமமும், புத்ரீயாகக் கொள்பவனுக்குக் காமமில்லாத அன்பும், தாயாராகக் கொள்பவனுக்கு பக்தியும் உண்டாகின்றன. சிலர் அபிப்பிராயத்தில் ஞாநம் எப்போது உண்டாகிறதோ அப்போது வஸ்து உண்டாகிறது. அப்படி உண்டாதல் சுகம், துக்கம் உண்டாதல் போலவாம். இது சரியன்று. வஸ்து இல்லாமல் பூர்வ அநுபவத்தினால் ஒருவஸ்துவின் ஸ்மரணை உண்டாகிறது. வஸ்து எதிரில் இல்லை. வஸ்து சித்தத்தினின்று உண்டாகவில்லை என்பதை அடுத்த சூத்திரம் தெளிவிக்கிறது.

16. ந சைகசித்ததந்த்ரம் வஸ்து ததப்ரமாணகம் ததா கிம் ஸ்யாத் ॥

வஸ்துவானது ஒருவனுடைய சித்தம் பற்றியதாக இல்லை. அப்படி இருக்குமாகில் (அது பிரமையாகும். உண்மையிலில்லை.) சித்தம் வேறிடத்தில் போயிருக்கும்போது வஸ்து இருக்கிறதன்றோ.

குறிப்பு:—ஒருவன் சித்த நிரோதம் பண்ணினாலும் சித்தத்தை வேறு விஷயத்தில் செலுத்தினாலும் வஸ்துவுடன் சம்பந்திக்கிறானில்லை. அப்போது வேறொருவன் சித்தத்திற்கு அவ்வஸ்து உண்டா அல்லவா? வஸ்து இல்லாமல் போய்விடுமா? ஸமாதிகலைந்து அல்லது வேறு விஷயத்தை நாடின மநஸ் திரும்பினால், அவ்வஸ்துவைப் பார்க்கிறானே, எங்கே நின்று அவ்வஸ்து திரும்ப வருகின்றது? ஒருவன் ஒரு வஸ்துவின் முன் பக்கத்தைப் பார்க்கின்றான்,

அல்லது பின்பக்ஷத்தைப் பார்க்கின்றன. அப்படியானல் முறையே பின்பக்கம் இல்லையென்றும் முன்பக்கம் இல்லையென்றும் ஏற்படும். அது சரியன்று. வஸ்து புத்திதந்த்ரம் அன்று. வஸ்து தந்த்ரமே தானக உள்ளது.

17. 𑌤𑌦𑍁𑌪𑌰𑌾𑌗𑌾𑌪𑍇𑌕𑍍𑌷𑌿𑌤𑍍𑌵𑌾𑌚𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑌸𑍍𑌯 𑌵𑌸𑍍𑌤𑍁 𑌜𑍍𑌞𑌾𑌤𑌾
𑌜𑍍𑌞𑌾𑌤𑌮𑍍 ॥

விஷயங்களுடைய ஸம்பந்தத்தை மநஸ் எதிர்பார்க்கின்றமையால் அறியப்படும், அறியப்படாத என்ற தன்மையுள்ளவையாக (வஸ்துக்கள் ஆகின்றன.)

குறிப்பு:—விஷயங்கள் அயஸ்காந்தத்திற்கு ஸமானமாகவும், மநஸ் அயத்திற்கு ஸமானமாகவும் இருக்கின்றன. வஸ்துக்கள் மநத்தை ஆகர்ஷித்து மநத்தின்கண் காமக்குரோத முதலிய தோஷங்களை உண்டுபண்ணுகின்றன. ஸ்வயமாக மநத்திற்கு விஷயங்களாலன்றி காமக்குரோத முதலிய தோஷங்களில்லை. அறியப்படும் விஷயம் ஞாதம் என்றும், அறியப்படாத விஷயம் அக்ஞாதம் என்றும் சொல்லப்படுகிறது. அறியப்படும் விஷயத்தில் மநத்திற்கு ஒருவித பரிணமமும், அறியப்படாத விஷயத்தில் வேறு ஒரு பரிணமமும் உண்டாகின்றன.

18. 𑌸𑌦𑌾 𑌜𑍍𑌞𑌾𑌤𑌾𑌶𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑌵𑍃𑌤𑍍𑌤𑌯𑌸𑍍𑌤𑌤𑍍𑌪𑍍𑌰𑌭𑍋𑌃 𑌪𑍁𑌰𑍁𑌷
𑌸𑍍𑌯𑌾𑌪𑌰𑌿𑌣𑌾𑌮𑌿𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 ॥

(புருஷனல்)மநோவிர்த்திகள் எப்போதும் அறியப்படுகின்றன. மநத்திற்கு ஸ்வாமியான புருஷனுக்கு எப்போதும் பரிணமமின்மையால்.

குறிப்பு:—பரிணமம் = மாறுதல். மநத்தைவிடப் புருஷன் வேறு என்பதை அறியவேண்டும். மநஸ் என்பதில் அடியில் வரும் நான்கும் அடங்கும்.

சித்தம் = ஸ்மரணை
புத்தி = வஸ்துக்களின் உண்மையை அறிதல்.
அகங்காரம் = நான் என்ற அபிமாநம்.
மநஸ் = விஷயங்களை கிரஹித்தல்.

விஷயங்களை மநம் கிரஹிக்கிறதென்றால் மநம் அவ்வஸ்துக்களின் பரிணமத்தைப் பெறுகிறது. வஸ்துக்களெல்லாம் பரிணம

முள்ளவை. புருஷனும் பரிணாம முள்ளவனாக ஏற்படுவானாகில் மநம் அந்த புருஷ ரூபமாக ஒரு சமயத்தில் ஆகியும் ஒரு சமயத்தில் ஆகாமலும் இருத்தல் கூடும். ஆனால் அப்படியின்றி நான் (புருஷன்) விர்த்தி எப்போது மிருக்கின்றமையால், புருஷன் விஷயமன்று. மநஸ்ஸைப்போலப் புருஷனும் மாறிக்கொண்டிருப்பானாகில், புருஷனைப்பற்றிய மநோ விர்த்திகள் சப்தாதி விஷயங்களைப் போல அறியப்பட்டும் அறியப்படாமலும் இருக்கும். புருஷன் மாறாமல் இருக்கின்றமையால் புருஷனைப் பற்றிய மநோவிர்த்தி எப்போதும் இருக்கின்றது. புருஷனுக்கு சூத்திரத்தில் பிரபு என்ற பதம் உபயோகித்திருக்கிறது. அதன் பொருள் ஸ்வாமி என்பதாம். மநஸ்ஸைவிடப் புருஷன் உயர்வானவன், வேறானவன் என்பதைக் குறிப்பதற்கு பிரபு என்ற பதம் உபயோகித்திருக்கிறது. புருஷனுக்கு வேறு தன்மை என்னவென்றால், பரிணாமமின்மையாம்.

19. ந தத்ஸ்வாபாஸம் த்ருஶ்யத்வாத் ॥

அது (மநம்) ஸ்வப்ரகாசமுள்ளதன்று. அது (வேறென்றால்) அறியப்படுகின்றமையால், அநாவது அது ஜடமாகிறபடியால்.

குறிப்பு:—அக்நியைப் போல மநஸ் தானும் பிரகாசமுள்ளது. வஸ்துக்களையும் பிரகாசப்படுத்துகிறது என்று வைநாசிகர் சொல்லுகின்றதை மறுத்தற் பொருட்டு இந்த சூத்திரம் ஏற்பட்டது. மநம் ஸ்வப்ரகாசம் உள்ளதன்று. அது ஜடம். மற்ற இந்த்ரியங்கள் மநத்தால் பிரகாசிக்கின்றமை போல மநமும் வேறொன்றால் பிரகாசிக்கின்றது. அக்நி உபமாநம் சரியன்று. சில வஸ்துக்களின் சேர்க்கையால் ஒரு கிரியை ஏற்பட்டு, அதன் மூலமாக அக்நியின் பிரகாசம் உண்டாகிறது. புருஷனே ஸ்வபாவத்தில் பிரகாசமுள்ளவன். பரிணாமமில்லாதவன். பிரகாசித்தற்கு வேறு வஸ்துவின் அபேக்ஷை வேண்டுகின்றானில்லை. மநஸ் வேறொன்றின் உதவியால் பிரகாசிக்கின்றதில்லை என்று சொல்ல முடியாது. "நான் கோபமாக இருக்கிறேன், நான் துக்கமாக இருக்கிறேன், நான் பயந்தவன்." இப்பேர்க்கொத்த அநுபவங்களால் சித்தத்திற்குப் பரிணாமங்கள் ஏற்படுகின்றனவென்று அநுபவரூபமாக சித்தத்தின் ஸ்வரூபத்தை யறிகிறோம்.

321

ஸ்ரீராமஜயம்.

ஸ்ரீமத்வால்மீகிராமாயணம்.

தமிழ்வசனம்.

திருச்சிராப்பள்ளி. எஸ். பி. ஜீ. காலேஜ் லெக்சரர்,

ஸி. ஆர். ஸ்ரீநிவாஸய்யங்கார் பி. ஏ.

அவர்களால் ஸுலபமான நடையில் மூலத்திற்கு ஸரியாய் மொழி பெயர்க்கப்பட்டது.

நேர்த்தியான கடிதத்தில் தெளிவான எழுத்தில் அச்சிடப்பட்டிருக்கிறது. ஏழு காண்டங்களும் ஸுமார் 3500 பக்கங்களில் 16 பாகங்களாக வெளியிடப்பட்டு, 4 வால்யூம்களாய், உயர்ந்த கலிக்கோ கில்ட். பைண்ட் செய்யப்பட்டுத் தயாராயிருக்கின்றன.

ஸெட்டின் விலை ரூ. 23—0—0. (தபால் சார்ஜ் வேறு)

இங்கிலீஷ் வசனம்.

3 பாகங்கள் வெளியாயிருக்கின்றன. பாக்கி 13 பாகங்கள் இரண்டு மாஸத்திற்கு ஒருதரம் வெளிவரும்.

ஒவ்வொரு பாகத்தின் விலை ரூ. 1—8—0. (தபால் சார்ஜ் வேறு.)

ஸாவித்ரீசரித்ரம்.

பதிவ்ரதாமஹாத்ம்யம்)

ஸ்ரீமஹாபாரதத்திலிருந்து, மொழிபெயர்க்கப்பட்டது. விலை அணா 4.

நெ. 27 செட்டைமால் தெரு,
திருச்சிராப்பள்ளி. } G. ஸ்ரீநிவாஸராகவையங்கார்.

பெண் கல்வி.

சித்திர சகிதமான ஒரு மாதாந்த சஞ்சிகை.

இப்பத்திரிகை ஸ்திரீகளின் நிலைமையை உயர்த்துவதற்காகவே தோன்றிய ஒன்றாகும். இதில் ஸ்திரீகள், தாய், மனைவி, சகோதரி, புத்திரி முதலிய பல நிலைகளில் செய்யவேண்டிய கடமைகளும் குடும்ப நிர்வாக சாஸ்திரம் வைத்தியவிஷயம், சுகாதாரவிஷயம் இவைகளைப்பற்றிய விஷயங்களும், ஒழுக்கம், குணம், கல்வி முதலியவற்றில் கீர்த்தியடைந்துள்ள தற்கால முற்கால மாதர்களின் சரித்திரங்களும் இனிய தமிழில் வெளியிடப்படும்.

இதற்குவிஷயங்கள் எழுதுபவர் முக்கியமாய் ஸ்திரீகளேயாவர்.

☞ இப்பத்திரிகை ஒவ்வொரு குடும்ப ஸ்திரீயும், வாத்திச்சிமார்களாக பயிற்சிபெறும் ஒவ்வொரு ஸ்திரீயும் படிக்கவேண்டியது அவசியம்.

வருஷசந்தா ரூ 2—8—0. தனிப்பிரதி 0–4–0. மாதிரிப்பிரதி வேண்டுவோர் ஒரு அணா வேலில் அனுப்பி[illegible]பெற்றுக் கொள்ளவும்.

சகோதரி[illegible] தாயாரம்மா,
பத்தி[illegible], பெண்கல்வி, சென்னை.

பல கண்காட்சிகளில்
மெடல்கள்பெற்ற அபூர்வ ஔஷதங்கள்.

பி. சுப்பராய், ஆயுர்வேத

ஔஷதசாலை,

ஸ்ரீ வெங்கடேச பெருமாள்கோவில் சன்னிதி, தஞ்சாவூர்.

தயவு செய்து
இதை தங்கள் சிநேகிதர்களுக்கு வாசிக்கக் காண்பியுங்கள்.

—:—

பி. சுப்பராயின் அபூர்வ ஆயுர்வேத ஔஷதங்கள்.

14. உயர்ந்த கஸ்தூரி:—மிகவும் நேர்த்தியானதும், முதல்தரமானதும் காஷ்மீர் தேசத்திலிருந்து நேராக வரவழைத்த கஸ்தூரி நம்மிடத்தில் எப்பொழுதும் கிடைக்கும். தோலா 1-க்கு ரூபா 48. ஒரு ரூபாய்க்கு குறையாமல் சில்லறையிலும் விற்கப்படும். வி. பி. செலவு பிரத்தியேகம்.

15. தேள் கொட்டின் மருந்து:—இம்மருந்தை விஷம் தீண்டிய இடத்தில் தடவினால், க்ஷணமே விஷமிறங்கி, வருத்தப்பட்டு சகிக்கமுடியாத வேதனையில் நின்று நீங்கி; யாவரும் ஆச்சரியப்படத்தக்க விதமாய், ஆனந்திக்கும்படியான அநுகூலத்தைத் தரும். கிரயம் சீசா 1-க்கு அணா 4. இந்தியாவிலும் பர்மாவிலும் 1 முதல் 12 சீசாக்கள் வரையிலும் வி. பி. செலவு அணா 5 பிரத்தியேகம்.

16. சஞ்சீவி மாத்திரைகள்:—இம்மாத்திரைகளினால் தலைவலி, தலைப்பாரம், சளி, இருமல், சுரம், மயக்கம், வாந்தி, விஷசுரம், இசிவு, வயிற்றுப்பிசம், வயிற்றுவலி, தெற்குத்திக்கணை முதலிய ரோகங்கள் தீரும். அறைக்குழந்தைகள் முதல் யாவரும் உபயோகிக்கலாம். விலை சீசா 1-க்கு அணா 10. இந்தியாவிலும், பர்மாவிலும் 1 முதல் 6 சீசாக்கள் வரையில் அனுப்ப வி. பி. முதலிய செலவுகள் அணா 5 பிரத்தியேகம்.

முக்கிய குறிப்பு:—ஒரேதடவையில் 12 சீசா தேள் கொட்டின் மருந்துக்குக் குறையாமல் வாங்கினால் டஜன் 1-க்கு ரூ. 2-8-0 வீதம் கொடுக்கப்படும். வி.பி. செலவு அணா 5 பிரத்தியேகம். "இக்குறிப்பு தேள்மருந்து தவிர மற்றெந்த மருந்திற்கும் சம்பந்தப்படமாட்டாது."

என்னுடைய அவுஷத சாலையின் ஹெட் ஆபீசை பரங்கிபேட்டையிலிருந்து தஞ்சாவூருக்கு ஸ்திரமாக மாற்றிவிட்டபடியால், இனி எல்லா ஆர்டர்களும் இப்பக்கத்தின் தலையில் [illegible] ஹெட் ஆபீசாகிய தஞ்சாவூர் விலாசத்திற்கே எ[illegible] பரங்கிப்பேட்டைக்கு எழுதவேண்டாம்.